பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
ஜுலை 2018



நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

தோற்றம் 1972

ஜூலை 2018

*ஆசிரியர் / வெளியிடுபவர் :*
**அமின் மொஹமெட்**
*இணையாசிரியர் :*
**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**
*நிர்வாக ஆசிரியர் :*
**சஃபி மொஹமெட்**
*ஆசிரியர் குழு :*
**ஹிப்ஸுர் ரஹ்மான்**
**நெல்லை உலகம்மால்**
**வசந்தி ஆதித்தன்**
**கவிஞர் அ.முத்துசாமி**
**கவிஞர் ஈழபாரதி**
**கவிஞர் பாலமுனை பாறுாக்**
*ஆலோசகர்கள் :*
**“பைந்தமிழசு“ பாவலர் மா. வரதராசன்**
**கவிதாயினி சக்தி ஜோதி**
**கவிதாயினி அமுதா பொற்கொடி**

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...

TAMILNENJAM
59, rue des Entrechats, 95800 Cergy - France.

4, Sengeniyamman kovil street, Solainagar,
Muthialpet, Pondichery - 605 003. India.

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.
நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.
படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

## புதிய வெளியீடு...







**தேவைக்கு தொடர்புக்கொள்ளவும்.**

# ஊனம் விடைபெற வேண்டும்

ஆ.முத்துக்கிருஷ்ணன்

ஊரிலிருந்து கிளம்பியாயிற்று. அம்மாவும், அப்பாவும் இன்னும் இரண்டு நாட்கள் தங்கிப் போகச் சொன்னார்கள். மனைவிக்கும், மகனுக்கும் தங்கிச் செல்ல ஆசை தான். சிவகுமார் கூட அதே திட்டத்தோடு தான் வந்திருந்தான். ஆனால், ஊரில் நடந்த சம்பவம், அவனை அங்கு இருக்க விடவில்லை.

மதுரை வரை காரிலும், அங்கிருந்து விமானத்தில் செல்வதாக ஏற்பாடு.

வாடகை சொகுசு கார், கிராமத்து மேடு பள்ளச் சாலையில், நிமிர்ந்தும், சரிந்தும் ஓடிக் கொண்டிருந்தது. அது, சிவகுமாருக்கு எரிச்சலாகவும், அவனது மனைவிக்கும், மகனுக்கும் புது அனுபவமாகவும் இருந்தது.

பரந்து விரிந்து கிடந்த பொட்டல் காட்டில், தங்களது பச்சை தூரிகையை இழந்து, ஆங்காங்கே ராட்சச ஊதுவத்திகளை நட்டு வைத்தது போன்று காட்சியளிக்கும் மொட்டை பனை மரங்களையும், தண்ணீர் இல்லாமல் காய்ந்து பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கும் குளங்களையும் கடந்து, ஊசி கோபுரத்திற்கும் வண்ணாரப்பேட்டைக்கும் இடையில் கார் சென்று கொண்டிருந்தது.

பாளையங்கோட்டையில் படிக்கும்போது, தாமிரபரணியில் குளிப்பதற்கும், டவுனில் உள்ள சினிமா தியேட்டரில் படம் பார்ப்பதற்கும் பலமுறை அவ்வழியாக சென்றிருக்கிறான். அப்போதெல்லாம் சாலையின் இரு மருங்கிலும் மருத மரங்களும், சாலைக்கு அப்பால், பச்சை கம்பளங்களை விரித்தது போன்ற வயல்வெளிகளையும் பார்க்கப் பார்க்க பரவசமாய் இருக்கும்.

இப்போது, அந்த மரங்களும், வயல்களும் இருந்த இடத்தில் காரைக் கட்டடங்களும், பாலமும் எழுந்து நின்று எரிச்சலை ஏற்படுத்தின. அந்த சுகமான அனுபவத்திற்கு மனம் ஏங்கியது. ஆனால், அது இனி கிடைக்காது என்று புத்தியில் உறைத்த போது, மனதில் ஏற்படும் ஏமாற்றத்தை தவிர்க்க முடியவில்லை.

'என்னங்க, இங்கதானே குறுக்குத்துறை முருகன் கோவில் உள்ளது; அதை கொஞ்சம் காண்பியுங்களேன்,' என்றாள் மனைவி.

"அதுக்கு இன்னும் கொஞ்ச தூரம் போகணும்; வரும்போது சொல்றேன்," என்றான் சிவகுமார்.

ஒரே சீராக சென்று கொண்டிருந்த கார், ரெட்டியார்பட்டி அருகே வரும் போது, சாலையில், தண்ணீர் லாரியை மொய்த்தபடி பெண்கள் கூட்டம்; காரின் ஒலிப்பான் ஓசையை யாரும் பொருட்படுத்தவில்லை. வரிசையில் வந்தால், எங்கே தன் முறை வருவதற்குள் தண்ணீர் தீர்ந்து



விடுமோ என்ற பயத்தில் ஒருவருக்கொருவர் போட்டி போட்டு முண்டியடித்தனர்.

முகதாட்சண்யம் பாராது ஒருவருக்கொருவர் ஆபாச வார்த்தைகளால் திட்டிக் கொண்டனர். தண்ணீருக்காக சகஜமாக பழகுகிறவர்கள் கூட சண்டையிட்டுக் கொள்வதை பார்க்க வேடிக்கையாக இருந்தது. ஒட்டுனர் போய் வழிவிட கேட்டுக் கொண்டதால், காரை, ஏற இறங்க பார்த்தவாறு வழி விட்டது, கூட்டம்.

அடுத்த ஊரிலோ, காலிக் குடங்களுடன் சாலை மறியல் செய்தனர், மக்கள்.

தண்ணீருக்காக மக்கள் படும்பாட்டை நேற்று அவன் பார்த்திருந்தால், நிச்சயமாக விழா ஏற்பாட்டை தடுத்திருப்பான்; இவ்வளவு அவமானமும், புறக்கணிப்பும் ஏற்பட்டிருக்காது.

இந்திய வான்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில், மிக முக்கிய பொறுப்பில் உள்ளான், சிவகுமார். அவனது தலைமையில் உள்ள குழு, வான்வெளி ஆராய்ச்சியில் மிகப்பெரிய சாதனை புரிந்துள்ளது. இதுவரை, ரஷ்யா தான் அதிகபட்சமாக, 29 செயற்கை கோள்களை ஒரே சமயத்தில் அனுப்பி, சாதனை படைத்திருந்தது. இப்போது, அந்த சாதனை முறியடிக்கப்பட்டு, ஒரே விண்கலத்தில், 104 செயற்கைகோள்களை அனுப்பி, உலக சாதனை படைத்துள்ளது, இந்தியா. பிரதமரும், ஜனாதிபதியும் வாழ்த்து செய்தி அனுப்பியிருந்தனர். பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் அவனது பேட்டியையும், படங்களையும் கண்டு அவனே பூரித்து போனான்.

இச்சமயத்தில் தான், அவன் படித்த ஆரம்ப பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

'தம்பி சிவகுமார்... இன்னைக்கு உலகம் முழுவதும் உங்கள பற்றிதான் பேச்சு... உலகமே பாராட்டுற உங்கள, ஊர்க்காரங்க பாராட்டாம இருந்தா எப்படி... ஊரில் பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்றோம்; கலந்துக்குவீங்களா...' என, கேட்டார் ஆசிரியர்.

பிறந்த ஊர் ஜனங்களின் பாராட்டு யாருக்குதான் கசக்கும்!

'கண்டிப்பாக கலந்துக்கிறேன் சார்... ஏற்பாடு செய்யுங்க...' என்றான் உற்சாகமாக!

'தேதி சொல்லுங்க...'

'அடுத்த மாசம் அப்பாவ பாக்க வர்றேன்; அப்போ வைச்சுக்கலாம்...' என்றான்.

சிவகுமார் ஊருக்கு வந்து சேர்ந்தபோது, இருட்டி விட்டது. சமீபகாலமாக ஏற்பட்ட மாற்றங்கள் எதுவும் அவன் கண்ணில் படவில்லை. வீட்டு வாசலில் கார் வந்து

**குப்பன்ணா ஒட்டு போட்டுவிட்டு வெளியே வந்தார்.**

**பூத் ஏஜெண்டிடம் ''என் மனைவி ஒட்டு போட்டுட்டு போய்ட்டாளா'' என்று கேட்டார்.**

**ஏஜெண்ட் லிஸ்டை புரட்டி பார்த்துவிட்டு, ''ஆமாம் ஒட்டு போட்டுட்டு போய்ட்டாங்க'' என்றார்.**

**குப்பண்ணா வருத்தத்துடன் சொன்னார் ''கொஞ்சம் முன்னாடியே வந்திருந்தா அவள பார்த்திருக்கலாம்''.**

**பூத் ஏஜெண்ட் கேட்டார் ''ஏண்ணே அக்கா உங்க கூட இல்லியா?''**

**குப்பண்ணா சொன்னார் ''இல்லை தம்பி அவ செத்து 15 வருடம் ஆச்சி ஆனா ஒட்டு போட மட்டும் வந்துட்டு போறா''.**

நின்றபோது, தெருவே வந்து வரவேற்க, அதைக் கண்டு நெகிழ்ந்து விட்டனர், அவன் மனைவியும், மகனும்!

இரவு முழுவதும் அவன் சரியாக தூங்க வில்லை; நாளை நடக்கப்போகும் பாராட்டு விழா பற்றியே மனம் சுற்றிச் சுற்றி வந்தது. அவனது சாதனையையும், மகத்துவத்தையும் மற்றவர்கள் பேசப் பேச, அதைக் கேட்டு, ஊர் மக்கள், 'நீ இவ்வளவு பெரிய ஆளா... உன் சாதனை எங்களுக்கு இப்பதான் தெரிகிறது.

நீ இந்த ஊர்க்காரன்ங்கிறதுல எங்களுக் கெல்லாம் ரொம்ப பெருமை...' என்று அவர்கள் பேசப்போகும் வார்த்தைகளுக்காகவும், பாராட்டு களுக்காகவும் காத்திருந்தான்.

மறுநாள் காலை, 10:00 மணிக்கு விழா ஆரம்பித்து விட்டது; மேடையில், பிரத்தியேக அலங்காரத்துடன் போடப்பட்டிருந்த இருக்கை யில் அமர்ந்திருந்தான், சிவகுமார். விஸ்தாரமாக போடப்பட்டிருந்த பந்தலின் கீழ் உட்கார்ந்திருந்தனர், ஊர் மக்கள். அனைவரது முகத்திலும் பிரகாசம்!

தலைமை ஆசிரியர் பேசும்போது, சிவகுமார், தங்கள் பள்ளியில் படித்தது, தங்கள் பள்ளிக்கு பெருமை என்றும், அவனை மாதிரி மாணவர்கள் அனைவரும் உயர்ந்த நிலைக்கு வந்து, நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்றும், அவன் படித்த பள்ளியில் தலைமை ஆசிரியராக இருப்பதற்கு தான் அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டும் என்றும் கூறினார்.

அடுத்து பேசிய சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட ஆட்சியரும் கூட அவனை வெகுவாக பாராட்டினர். அவர்களின் பேச்சில் மிகவும் மகிழ்ந்து போயிருந்தான், சிவகுமார்.

'அடுத்து, நம் விழா நாயகன் பேசுவார்...' என்று தலைமை ஆசிரியர் அறிவித்தவுடன், அனைவரும் கைதட்டினர். உற்சாகம் கரை புரண்டோட, விசில் அடித்தனர், சிலர்.

சிவகுமார் எழுந்து, மைக்கை பிடித்து பேச ஆரம்பித்தபோது, 'தண்ணீர் லாரி வந்திருக்கு...' என்று எங்கிருந்தோ ஒரு குரல் கேட்டது.



# பூஞ்சோலையில் ஒரு பொன்வீணை

**பூஞ்சோலை மணக்கிறது.**
**ஒவ்வொரு பூக்களுமே சிரிக்கிறது.**

**பூவாக மொட்டுகள் துடித்திடவே.**
**பொன்னூஞ்சலில் மனம் ஆடிடவே.**

**மாந்தோப்பில் கிளிகள் கொஞ்சிடவே**
**மாம்பழத்தை வண்டுகள் துளைத்திடவே**

**மேகமதைக் குயில்கள் அழைத்திடவே**
**மேனியெல்லாம் குளிர் சிலிர்த்திடவே**

**கார்மேகத்தால் மயில்கள் ஆடிடவே**
**காட்சிகளைக் கண்கள் பதித்திடவே**

**தென்றல் தேகத்தைத் தழுவிடவே**
**தேனிசையை மூங்கில்கள் இசைத்திடவே.**

**மல்லிகைத் தோட்டம் மயக்கிடவே**
**மாமன் மகள் மயங்கிடவே**

**முல்லைப் பூக்கள் சிரித்திடவே.**
**முத்தங்கள் வண்டுகள் தந்திடவே.**



**சலசலக்கும் ஓடை நீரினிலே.**
**சிலுசிலுக்கும் மீன்கள் ஓடிடவே.**

**பூஞ்சோலையில் ஒரு பொன்வீணை**
**மீட்டுகிறாள் என் இயற்கைக் காதலி.**

**கவிஞர். கோவிந்தராசன்**

# மனக்கறை

சக்திவேலாயுதம் அவர்களின் சிறுகதை ஒரு சலவைத் தொழிலாளி வாழ்வியல் ரணங்களை ஒரு குறும்படம் போல Frame to Frame ஒரு Best திரைக்கதை போல சொல்கிறது...

பலரும் அறியாத அவர்களின் பரிதாபத்திற்குரிய பக்கங்களை நம் முன் விரித்து வைக்கிறது கதை...

ஒரு சிறுகதையாய் உள்ளீடு உத்தி உரைத்தல் மூன்றிலும் தன் பொறுப்பை துல்லியமாய் சொன்ன கதை சொல்லி திரு. சக்திவேலாயுதம் எழுத்தை வணங்குகிறேன்...

சிறப்பான ஆக்கங்களை வெளியிட்டு சிறந்து விளங்கும் தமிழ் நெஞ்சம் இலக்கிய உலகில் நல்ல முன்மாதிரி

– தஞ்சை தவசி

அவ்வளவுதான், அடுத்த நொடி, அந்த இடம் காலியாகி விட்டது. மேடையில் இருந்த அனைவரும், ஒருகணம் அதிர்ச்சியில் உறைந்து போயினர்.

அவமானத்தால் விக்கித்துப் போனான், சிவகுமார். எந்த மக்கள் அவன் பேசுவதை கேட்டு கைதட்டி பாராட்டி, அவனை தலை மேல் வைத்துக் கொண்டாடுவர் என்று எதிர்பார்த்தானோ, அவர்கள் அவன் பேச்சை கொஞ்சம் கூட பொருட்படுத்தாமல், தண்ணீருக்காக ஓடிவிட்டனர்.

சிவகுமாருக்கு அங்கே ஒரு நிமிடம் கூட நிற்க பிடிக்கவில்லை; மேடையில் இருந்த அனைவரையும் பார்த்து இயந்திரத்தனமாய் கும்பிடு போட்டு, இறங்கி, 'விடுவிடு'வென்று நடந்து, வீட்டுக்கு வந்து விட்டான்.

அதிர்ச்சியிலிருந்து மீண்ட தலைமை ஆசிரியர் அவன் வீட்டிற்கு வந்து, 'மன்னிச்சிடுங்க சிவகுமார்... இப்படி நடக்கும்னு கொஞ்சம் கூட எதிர்பாக்கல...' என்றார், குற்ற உணர்வுடன்!

'ஊர்க்காரங்க இப்படி நடந்து கொண்டதற்கு நீங்க என்ன சார் செய்வீங்க... உண்மையிலேயே என் மீதுள்ள அன்பாலும், அபிமானத்தாலும் இப்படி ஒரு பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்தீங்க... அது இப்படி முடியும்னா நினைச்சீங்க...' என்றான்.

அப்போது, அவன் அருகில் நின்றிருந்த அவன் நண்பன் சுப்பிரமணியன், 'ஊர் ஜனங்களுக்கும் உன் மீது அன்பும், மரியாதையும் உண்டு...' என்றான்.

'கூட்டத் திலிருந்து எழுந்து ஓடுவது தான் மரியாதையா...' என்று கோபப்பட்டான் சிவகுமார்.

'கோபப்படாதே... இங்குள்ள சூழ்நிலை அப்படி; சரியா மழை பெய்யாததால் ஆறு, குளம், கிணறு எல்லாம் வறண்டு, நீர்மட்டம் அதல பாதாளத்துக்கு போயிருச்சு. ஆழ்துளை கிணற்றிலிருந்து கூட தண்ணீர் எடுக்க முடியல. தாமிரபரணியிலிருந்து டேங்கர் லாரி மூலமாக தண்ணீர் எடுத்து வந்து, குளோரின் மாத்திரைகளை போட்டு வினியோகிக்கிறாங்க. இதை விட்டா, ஊர் ஜனங்களுக்கு குடிக்க தண்ணீர் கிடையாது.

'அவங்கள பொறுத்தவரை இந்தியா ராக்கெட் விடுறதும், விடாததும், அதில் உலக சாதனை படைப்பதும் ஒரு பொருட்டே அல்ல. ஏன்னா, அது அவங்களோட வாழ்க்கையில எந்த ஒரு தாக்கத்தையும் உடனடியாக ஏற்படுத்தாது. ஆனால், தண்ணீர் அப்படியல்ல; அது அவங்களோட வாழ்வாதாரப் பிரச்னை. தண்ணீர் இல்லாமல் யாரும் உயிர் வாழ முடியாது. இப்ப சொல்லு, எது முக்கியம்...' என்று கேட்டான், சுப்பிரமணியன்.

சிவகுமாருக்கு நிலைமை தெளிவாக புரிந்தது. மவுனமாக படியேறி அவன் மொட்டை மாடிக்கு வர, அவர்களும் கூட வந்தனர்.

அங்கிருந்து பார்த்த போது, மரங்கள் எல்லாம் இலைகளை உதிர்த்து எலும்புக் கூடுகளாய் காட்சியளித்தன. வயல்வெளிகள் வெறும் தரிசு நிலங்களாகிப் போயிருந்தன.

பகல் பொழுதில் வந்திருந்தால், ஊருக்குள் நுழையும்போது, ஊரின் நிலைமை ஓரளவு புரிந்திருக்கும். விடிந்த பின்னும் வெளியே போக சந்தர்ப்பம் கிட்டவில்லை. குளித்து முடித்து சாப்பிட உட்காரும்போதே, வெகு நாட்களுக்கு பின் வந்திருக்கும் அவனையும், அவன் மனைவி மற்றும் மகளையும் பார்க்க, அக்கம்பக்கத்தினர் ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தனர். அவர்களிடம் பேசி விடை பெறுவதற்குள், விழாவுக்கு அழைத்துப்போக தலைமை ஆசிரியர் வந்து விட்டார். இப்படி ஊரின் நிலைமையை புரிந்துகொள்ள முடியாதபடி சந்தர்ப்பங்கள் அமைந்து விட்டன.

'என்னை மன்னிச்சிடுங்க சார்... நான் கொஞ்சம் அவசரப்பட்டுட்டேன்... ஆகாயத்தில் பறக்கும்போது, பூமியில் உள்ள மேடு பள்ளங்கள் தெரியாது; அதுபோல வானத்தை அளந்து கணக்கிட்ட என் கண்களுக்கு, இங்குள்ள பிரச்னைகள் தெரியாம போயிருச்சு. துக்க வீட்டில், பிறந்தநாள் கொண்டாடத்தை எதிர்பார்த்தது என் தப்பு தான்...' என்று சொல்லி வருத்தப்பட்டான், சிவகுமார்.

'இதில், மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் இல்ல; நாட்டின் தகவல் தொடர்புக்கும், தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் உலக அரங்கில் நம் கவுரவத்தை தக்க வைத்துக் கொள்வதற்கும் தீவிரமாக செயல்படுறோம். ஆனா, அதைவிட முக்கியமான, நாட்டு மக்களின் வாழ்வாதார பிரச்னைகள தீர்ப்பதில் தீவிரம் காட்டுறதில்ல; நம் நாட்டில் வற்றாத ஜீவநதிகளுக்கு பஞ்சமில்ல. ஆனாலும், குடிக்க தண்ணீர் கிடைக்காமல் திண்டாடுறாங்க, மக்கள். விவசாயம் செய்ய முடியாமல், விவசாயிகள் தற்கொலை செய்துக்கிறாங்க.

'உடலில் உள்ள எல்லா உறுப்புகளும் ஒரே சீராக வளர்ந்தால் தான் அது வளர்ச்சி; ஒரு உறுப்பு வளர்ந்து இன்னொரு உறுப்பு வளரலன்னா, அது ஊனம். நம் நாட்டு வளர்ச்சியும் அப்படித்தான் இருக்கு...' என்றான், சுப்பிரமணியன்.

ஒரு வழியாக, சிவகுமார் சமாதானம் அடைந்தாலும், ஏனோ, அவனால் சகஜமாக இருக்க முடியவில்லை.

அவனுடன் சேர்ந்து உழைத்த சக விஞ்ஞானிகளும் இந்த சாதனைக்காக எவ்வளவு கஷ்டப்பட்டுள்ளனர் என்பது அவனுக்கு தெரியும். அந்த உலக சாதனையை, தன் சொந்த ஊர் மக்களோடு பகிர்ந்துகொள்ள ஓடோடி வந்து, அது முடியாமல் போனமைக்காக மிகவும் வருந்தினான். அதே சமயம் சுதந்திரம் பெற்று, 70 ஆண்டுகள் கடந்த பின்பும், நாட்டு மக்களின் மிக முக்கிய வாழ்வாதாரமான, தண்ணீர் பிரச்னையை கூட தீர்க்க முடியாமல், மற்ற களங்களில் சாதிக்கும் சாதனைகளை எப்படி உண்மையான சாதனைகளாகும் என்று யோசித்தபடி காரில் பயணித்தான்.

அவனது கார், திருநெல்வேலி சந்திப்பிலுள்ள பழைய பேருந்து நிலையத்தை தாண்டி ரயில் நிலையம் நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

Patient :-

**டாக்டர், எனக்குத்தான் எதுவும் இல்லையே.. அப்புறம் ஏன் என்னை ICU - ல வச்சிருக்கீங்க... !!!**

Doctor :-

**உனக்கு எதுவும் இல்லன்னு யார் சொன்னது.. உனக்கு தாம்பரத்துல ஒரு Flat, அண்ணாநகர்ல ரெண்டு பங்களா இருக்கே.. எல்லாம் எனக்குத் தெரியும்.. பேசாம படு..**

# இனப்பற்று

இனப்பற்று என்பது ஒவ்வொரு மாந்தனுக்கும் இன்றியமையாத ஒன்று. இனம் என்றால் என்ன? ஒரே வகையைச் சேர்ந்த பலவற்றை உள்ளடக்கிய பிரிவு. (Type; Superclass) மக்கள் பிரிவு; குலம் (Race; Ethnic group; Community).

ஒரு மொழி பேசுகின்ற கூட்டத்தின் அடையாளம். நான் எந்த இனத்தை சேர்ந்தவன் என்பதை நான் பேசும் எனது தாய் மொழி அடையாளம் செய்கின்றது.

எனது மொழி தமிழ் மொழி. எனது இனம் தமிழினம். இது தான் எனது அடையாளம். இந்த இனம், மொழி என்னும் இரண்டினால் மட்டுமே ஒரு குமுகாயத்தினை செம்மையான வழியினில் கொண்டு செல்ல இயலும்.

இனப் பற்றும், மொழிப் பற்றும் கொண்டவன் ஒற்றுமை என்ற ஒன்றினை தாங்கி நிற்பான். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு". என்று பாரதி பாடுவான்.

எப்படிப் பட்ட மாந்தர்க்கும் இந்த இனப் பற்று உண்டு. அறிஞர் என்றும், ஆன்றோர், ஞானி என்றும், பெரியோர் என்றும் போற்றப் படுகின்ற அனைவருக்கும் இது உண்டு.

என்னதான் ஊருக்கும், உலகிற்கும் அறிவுரைகள் கூறினாலும் ஒரு சமயத்தில் அவர்களின் உண்மை உணர்வுகள் வெளி படத்தான் செய்யும். எடுத்துக் காட்டாக இருவரைப் பற்றி கூறுகின்றேன்.

ஒரு முறை ஞானி விவேகானந்தர் கேரளா மாநிலத்திற்கு சென்றிருந்தார். அங்கு மலையாள நண்பர் ஒருவர் இவர் தங்குவதற்கு தனது வீட்டில் ஏற்பாடு செய்திருந்தார். பெரிய வீடு அனைத்து வசதிகளும் நிறைந்த வீடு. எந்தக் குறையும் அங்கு இல்லை. விவேகானந்தர் அந்த நண்பரின் வீட்டில் வந்து இறங்கினார். நண்பருக்கு மிக்க மகிழ்ச்சி. நாள் முழுவதும் விவேகானந்தரின் ஆன்மிக உரைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். மாலையில் விவேகானந்தரைக் காண வங்காளி ஒருவர் வந்தார். அவர் விவேகானந்தரிடம் வங்காள மொழியில் பேசினார்.

விவேகானந்தர் வங்காள மொழியை தாய் மொழியாகக் கொண்டவர். இரவானதும் விவேகானந்தர் மலையாள நண்பரிடம் சொன்னார். 'அய்யா, நான் இந்த வங்காள நண்பருடன் செல்கிறேன். அவருடன் தங்கிக் கொள்கிறேன்". என்றார்.

இதைக் கேட்டதும் மலையாளி அதிர்ந்தார். 'அய்யா, தாங்கள் என்னுடன் தங்குவதாக வந்தீர்கள் இப்போது அவருடன் செல்வதாக கூறுகின்றீர்கள்". 'ஒரு வங்காளி இன்னொரு வங்காளியைக் கண்டால் அவனுடன் கை கோர்த்துக் கொண்டு
சென்று விடுவான்". என்ற கூறிவிட்டு தனது பையை தூக்கி கொண்டு வங்காள நண்பருடன் சென்று விட்டார். இது பக்கங்கள் காணா வரலாற்று உண்மைகள்.

மற்றொரு சான்றும் சொல்கின்றேன். புகழ் பெற்ற இரண்டாம் குடியரசு தலைவர்

சர்வபள்ளி இராதாகிருட்டிணன் என்பவரை நாம் நன்கு அறிவோம். அவர்நல்லாசிரியர் என்பதனால் அவரின் பிறந்த நாளை நாம் ஆசிரியர் நாளாக கொண்டாடுகின்றோம்.

அவரின் ஆங்கிலப் புலமை, செம்மையான பணிகளின் ஆற்றலைக் கண்ட ஆங்கில அரசு அவருக்கு 'சர்" பட்டம் கொடுத்து வாழ்த்தி பாராட்டியது. அவர் 05. 09. 1888ஆம் ஆண்டு திருத்தணியில் பிறந்தார். ஆனால் அன்றைய காலத்தில் மாநிலங்கள் மொழி வழி மாநிலங்களாகப் பிரிக்கப் படவில்லை. அவரை சர்வபள்ளி இராதாகிருட்டிணன் என்றழைப்பர்.

தெலுங்கு இனத்தைச் சேர்ந்தவர். தெலுங்கு மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்.

*'சிகரம்' இதழ் நடத்திய இலக்கியப் போட்டியில் 20.05.2018 அன்று சேலத்தில்*

*'புத்தனைத் தேடும் போதி மரங்கள்' துளிப்பா நூலுக்காக முதல் பரிசாக உரூவா 2,500 பெறுகிறார் கு.அ.தமிழ்மொழி*

*உடன் சிகரம் இதழ் ஆசிரியர் பழ.அன்புநேசன் ஐயா, சக்தி அருளானந்தம் அம்மா, சந்திரா மணாளன் ஐயா, பாவலர் சூர்யநிலா அவர்கள்*



உபநிடதங்கள், பிரம்ம சூத்திரங்கள், பகவத் கீதை போன்ற நூட்களை மொழி பெயர்ப்பு செய்த்தனால் 'ஆசாரியர்" என்னும் பட்டத்தைப் பெற்றவர்.

இளமை காலத்தை அவர் திருப்பதியில் கழித்தாலும் கல்வி கற்றதும் முதுகலைப் பட்டம் பெற்றதும் சென்னை பல்கலைக் கழகத்தில் தான். சைதாப் பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்றவர்.

அந்த கால கட்டத்தில் மாநிலங்கள் மொழி வழியாகப் பிரிக்கப் பட்டன. மலையாள மாநிலம் மலையாளிகளுக்கு, தெலுங்கு மாநிலம் தெலுங்கர்களுக்கு, தமிழ் மாநிலம் தமிழர்களுக்கு என்று பிரித்தனர்.

இதனில் எல்லைகள் பிரிப்பதில் சில இடர்கள் எழுந்தன. அதில் திருத்தணி தங்களுக்கு சொந்தம் என்று தமிழரும், தெலுங்கரும் வாதிட்டனர்.

அன்று 'திருத்தணி தங்களுக்கே சொந்தம்" என்று உரிமைக் குரல் கொடுத்தவர் சர்வபள்ளி இராதாகிருட்டிணர். 18 நூட்களை எழுதிய மிகப் பெரும் அறிஞர். பல பட்டங்களைப் பெற்ற சான்றோர்.

பாரத பூமி பைந்தமிழர் பூமி என்பர். தென்னகம் முழுவதும் தமிழர்களுக்கே சொந்தமானது. ஒரு காலத்தில் நாம் அனைவருமே தமிழர்களாக தமிழ் பேசுகின்றவர்களாகத்தான் இருந்தோம்.

அய்ம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் இருந்தது. ஆனால் அன்று மலையாளம், கன்னடம், உருது, தெலுங்கு என்ற எந்த மொழியும் கிடையாது.

இன்றும் திருமலை என்று அழைக்கப்படும் திருப்பதியின் கோயில்களில் உள்ள கல் வெட்டுகள் தமிழில் உள்ளன. அவைகளைக் கட்டி உருவாக்கியவர்கள் நம் தமிழ் முன்னோர்கள்.

பெரியார், அண்ணா, சிலம்புச்செல்வர் மா. பொ. சிவஞானம் போன்றோர்களின் பயனாக திருத்தணி தமிழர்களின் மாநிலமான அன்றைய மெட்ராசு டிசுட்டிரிக்சுடன் சேர்ந்தது.

மகான் என்றும், ஞானி என்றும், ஆன்மீகயாளர் என்றும் சொல்லப் படும் விவகானந்தர் வங்காளியைக் கண்டதும் அவருடன் சென்றுவிட்டார்.

சர்வபள்ளி இராதாகிருட்டிணன் திருத்தணி தெலுங்கருக்கே சொந்தம் என்று குரல் கொடுத்தார்.

எப்படிப்பட்ட ஞானி என்றாலும், அறிஞர் என்றாலும் ஓர் நிலையில் அவர்களின் உண்மைத் தன்மையினை வெளிப்படுத்துகின்றனர்.

அதற்காக நாம் அவர்களின் மீது எந்தக் குறையும் கூறவில்லை. நடந்த உண்மைகளை உரைக்கின்றோம். அது நமது கடமை.

தனது இனத்தின் மீது அவர்களுக்கு இருக்கும் பற்று அது எந்த நிலையிலும் மாறாது. ஒவ்வொரு மாந்தனுக்கும் இனப் பற்று என்பது மிகத் தேவையான ஒன்று.

ஒரு காக்கையின் மீது கல்லெறிந்தால் பல காக்கைகள் ஒன்று கூடி கரையும். அது தான் இனப் பற்று .

நமது ஆதங்கம், மற்றவர்களுக்கு இருக்கும் இனப் பற்று நம் தமிழர்களுக்கு இல்லையே என்பதுதான்.

என்றைக்கு நாம் சாதி, சமயம் வேறுபாடுகளைக் களைந்து நாம் அனைவரும் தமிழர்கள், தமிழ் மொழியினை பேசுபவர்கள், தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஒன்று பட்ட சிந்தையில் இணைக்கின்றோமோ அன்று தான் நம் தமிழினம் உயர்ந்த பாதையினை நோக்கிச் செல்லும். அன்று நாம் வெற்றியின் முகடுதனை எட்டுவோம்.

நம் தமிழர்களுக்கு வேண்டும் இனப்பற்று.

**– கவியரசு**

# தேடுகிறேன் வறுமையற்ற வாழ்வை

என் தேசத்தில் தேடுகின்றேன்
வறுமையற்ற வாழ்வாய்
எனக்கான சந்ததிகளில்
விழிகள் நிறைய
கண்ணீரோடு கையேந்தும்
சிறுவர்களின் கெஞ்சலும்

தோல்சுருங்கி
கைவிடப்பட்ட மூதாட்டியின்
முனகலோடும்

நடுங்கும் கைகளில்
கைத்தடியின் ஆதரவில்
கால்இடறி ஆதரவின்றி
விழப்போகும் முதியவரிடமும்
தேடுகிறேன்
வறுமையற்ற வாழ்வை.

ஒரே துணியை பலமுறை
உடுத்தி சக மாணவரின்
கேலிக்கு உரித்தாகி
முகம் சுண்டி வீடு திரும்பும்
மாணவனிடமும்

கல்வியின் ஏக்கங்களில்
வீடு வீடாய் பாத்திரக் கரியினை
முகத்தில் தடவி
வீடு திரும்பும்
சிறுமியிடம் தேடுகிறேன்
வறுமையற்ற வாழ்வை.

மார்சுரக்க வழியின்றி
தண்ணீர் நிரப்பி
தன் கைக்குழந்தையின் பசி போக்க
வழியின்றித் தவிக்கும்
தாய்மையில் தேடுகின்றேன்
வறுமையற்ற வாழ்வை.

இப்படியாக அடுக்கிப்போனால்
கண்ணிர் தளும்பும்
என் விழிகளில்
உவர்ப்புநீர் வற்றி
உதிரம் கொட்டிப்போகும்

வறுமையற்ற
வாழ்வினைத் தேடி
இன்னும் தான் ஓடுகின்றோம்
இன்னும் அந்த கானல்
நீர் கண்ணுக்குத் தெரிகின்றது
கைகளுக்கு எட்டவில்லை.

**கோவை சசிகுமார்.**

## நீதான் எந்தன் நிழல்

மௌனப் புன்னகை
கொட்டிய
உந்தன் வதனத்திலிருந்து
ததும்பி ஓடும்
அன்பின் வாசனையை
அள்ளிக் குடிக்கிறேன்...

அது
நீண்ட சஞ்சரிப்போடு
எந்தன் கரங்களில் நசிபட்டு
என்னைத் தாண்டி
நெடுதூரம் ஓடியது
ஆனந்தச் சாயல்கள்...

விரித்துப் பார்க்கையில்
கொம்புகள் தள்ளி
மடிந்து போன
கனவுகளைச் சேர்த்து
புதுப்பாடம் புகட்டியது
நீதான் எந்தன்
நிழற் படமென.!!!

**கவிதாயினி லீஸா**



# நான் தமிழனா ? தலித்தா ?



காலங்காலமாக அடிமைப் பட்டு கிடக்கும் சமூகம் தான், இந்த ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் என்று பொய் உரைகள் உரைத்துக் கொண்டிருக்கின்றனர். இடையில் வந்த பார்ப்பன ஆரியர்கள்.

இங்கு பார்பனன் என்பவர்கள் பிராமனர்கள் மட்டுமேயல்ல. சக மனிதன் மீது தனது சுய அடையாளத்திற்காகவும், சாதிய அடையாளத்திற்க்காகவும் மற்றவர்கள் மீது அதிகாரத்தை செலுத்துபவர்கள் அனைவரும் பார்ப்பனர்கள் தான்.

இப்படி தனது அதிகாரத்தை மற்றவர்களிடத்தில் அடிமை தனத்தை ஏற்ப்படுத்துவதென்பது மனித விரோத செயலாகும்.

ஆனால் தலித்துகள் மீது தொடர்ந்து பல வன்கொடுமைகளும், கொலைகளும் நடந்துக் கொண்டு தான் இருக்கிறது.

அதைத் தொடர்ந்து உயர்க்கல்வி நிலையங்களில் தோழர் ரோகித்வெமுலா முதல் ஜோயல் பிரகாஷ் வரை சாதி ரீதியான, மதரீதியான படுகொலைகள் நடந்திருக்கின்றன்.

நாம் தமிழராய் ஒன்றினைவோம் என்று கூறும் பல தமிழர் அமைப்புகள் தமிழர் பிரச்சினைகளை பேச முன் வரும்போது.

ஜோயல்பிரகாஷ் தமிழர் தானே ஏன் இங்குள்ள தமிழர் அமைப்புகள் போராட முன்வரவில்லை. என்ற கேள்வியை எழுப்பும் தேவை இங்கிருக்கிறது.

அப்போ, நாங்கள் தமிழரா தலித்தா என்ற கேள் வருகிறது.

அனைவரும் உணர்வோடும், பண்பாட்டு மீட்டெடுப்புக்காகவும், ஜல்லிக்ட்டில் ஒன்று திரண்டதைப் பலோ அனிதாவின் மரணத்தின் போது பல இடங்களிலும் பல அமைப்புகளும் போராட்டம் நடத்தினார்கள். ஏனென்றால் அனிதா தமிழச்சி, ஏனென்றால் நீட் தேர்வு என்பது அனைத்து சமூகத்தினருக்குமான பிரச்சினை என்பதை இந்த பொது சமூகம் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

இங்கு பல விசயங்களுக்கு தலித்துக்கள் தான் போராளிகளாகப் படுகிறார்ளே தவிர பலனை மட்டும் அனைவரும் அனுபவிக்கிறார்கள்.

நீட் தேர்வு வந்தால் பொருளாதார அடிப்படையில் பின்தங்கியுள்ள அனைத்து சமூகத்தினரையும் பாதிக்கும் என்பதை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது தனது அரசியல் எதிர்ப்புகளை மத்திய அரசிற்கு தெரிவிக்கும் விதத்திலும் போராட்டங்களையும், நினைவேந்தல்களையும், பல அரசியல் கட்சிகள் முன்னெடுத்துச் சென்றார்கள்.

அனிதாவிற்கு கூடி கூட்டம் பாதிக் கூட நந்தினிக்கு போராட முன் ரவில்லை. ஏனென்றால் நந்தினி ஒரு தலித்.

நந்தினிக்காக போராடுவதால் மற்றவர்களுக்கு எந்தொரு பலனும் இல்லை என்பதால் எந்த தமிழ் அமைப்புகளும் முன்வரவில்லை. அதை தொடர்ந்து விழுப்புரம் அருகில் மிகக் கொடுமையான வன்முறையில் தலித் சமூகத்தை சார்ந்தவர்கள் இருந்திருக்கிறார்கள். அதைக் கண்டிப்பதற்கோ, கண்டணங்கள் தெரிவிப்பதற்கோ எந்த ஒரு அமைப்புகளும் முன்வரவில்லை. ஏனென்றால் அவர்கள் இந்த சாதிய சமூகத்தின் பார்வையில் தலித். அவர்கள் தலித்துக்கள் தான் என்பதை அனைவருக்கு உணர்த்தும் வகையில் நாளேடுகளிலும் கூட தலித் என்ற அடையாளத்துடன் தான் பதிவிடுகிறார்கள்.

இறப்புகளைக் கூட சாதி கண்ணோட்டத்தில்

பார்க்கின்ற மனநிலையை ஏற்படுத்துகிறார்கள்.

ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து யார் மேலெழுந்து வந்தாலும் அவர்களை சாதிய கண்ணோட்டத்திலும், இவர்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்ற பார்வையும் பலரது மனதிலும் ஏற்பட்டு இருக்கிறது.

சினிமா, அரசியல், சமூக செயற்பாடு என அனைத்து துறையில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும். அவர்கள் சினிமா எடுத்தாலும், அவை கலை நயமற்ற தலித் சினிமா எனவும். அரசியலில் மிக முக்கிய இடத்தில் இருந்து அனைத்து தமிழர் பிரச்சினைக்கும் குரல் கொடுத்தாலும்,அவர்கள் தலித் அரசியல்வாதிகள் எனவும். சமூக செயற்பாடுகளில் இணைந்து சேவை செய்தாலும், அவர்கள் தலித்த சமூக செயற்பாட்டாளர்கள் எனவும் முத்திரை குத்தப்படுகிறது.

தற்போது தமிழகத்தில் தொடர்ந்து நடக்கும் (தலித்) தமிழர்களுக்கு எதிரான பிரச்சினைகளுக்கு அரசும், அரசியல் அமைப்புகளும் எந்த வித நடவடிக்கைகளும் எடுப்பதில்லை.

இது தான் சமூக நீதியா என்ற கேள்வியை எழுப்பும் அளவில் உள்ளது.

புரட்சியாளர் அம்பேத்கரும், பெரியாரும் கண்ட போராட்ங்கள் அனைத்து வீணாகிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

அமைப்பாய் திரள்வோம், அறிவார்ந்து திரள்வோம் என்பது வெறும் வெற்றய வார்த்தையாகி விடக்கூடாது.

கோவில்கள் முன்பு ஆடுகளைத்தான் பழியிடுகிறார்கள், சிங்கங்களை அல்ல...

நீங்களே முடிவு செய்யுங்கள் நாங்கள் தமிழனாக இருக்க வேண்டுமா? தலித்தாக இருக்க வேண்டுமா?..

**மகிழ்ச்சி ஆ. ராம்குமார்**
பொய்யாத நல்லூர், அரியலூர்.



# தமிழும் வாழும்

பூங்குயில் கவிதை கேட்டு
புள்ளினம் இசைந்து பாடும்
தேங்கிய அருவி நீரில்
தீதிலா மான்கள் பேசும்
தாங்கிடும் அறங்கள் இன்ப
தமிழினில் வியந்து பாடும்
ஏங்கிய உள்ளம் தன்னில்
ஏழிசை மகுடம் சூடும்.

கம்பனின் விருத்தம் கொண்டு
கவிஞர் கவிதை பாட
இம்பரின் பாடல் கேட்டு
இசையுடன் லயமும் கொள்ள
செம்புலம் நீரின் ஊற்று
சீருடை பயிர்கள் வாழ
கம்புடன் சோளம் நெல்லும்
காருடை கழனி ஓங்கும்.

வற்றிடா வளமும் பொங்கும்
வான்கவி புகழ்ந்து பாடும்
கற்றவர் சூழ்ந்து ஏத்தும்
கன்னியா குமரி தெற்கும்
ஏற்றவோர் வடக்கே மேறு
இணையிலா வளமும் சூழ்ந்த
மாற்றமாய் தமிழும் வாழும்
மானிலம் தமிழர் நாடு..

- **இராமதாசு காந்தி**





## இர. அரவிந்த் கார்த்திக் எழுதிய தெவிட்டாத பாவிருந்து கவிதைநூல் வெளியீட்டு விழா!

*ஜூன் 17 (17/06/2018) அன்று திருச்சி மாநகரில் நடைபெற்ற ஊ..ல..ழ..ள.. கவிதாலயம் குழுமத்தின் மாபெரும் கவியரங்கில் வெளியிடப்பட்டது.*

*அவ்வமயம், கவிதைக் கலைமாமணி. சி.வீரபாண்டியத் தென்னவன் ஐயா வெளியிட பாவலர். கோவிந்தராஜன் ஐயா அவர்கள் பெற்றுக்கொண்டார்.*

*மேலும், இவ்விழாவில் கவிஞர். அனுராதா கட்டபொம்மன் ஐயா அவர்களும், ஊ..ல..ழ..ள குழுமத்தின் நிறுவனர் பிரபு வாய்ஸ் அவர்களும், கவிஞர். குமரன் அம்பிகா அவர்களும், கவிதாயினி சரஸ்வதி பாஸ்கரன் அவர்களும் உடனிருந்தனர்.*









# சாதியற்றவன்

கு.அ.தமிழ்மொழி



சீசர்..

இருட்டின் கருமையைத் தோற்கச் செய்யும் கருமை அதன் நிறம்.

பார்ப்பதற்கு சிறிய கன்றுக்குட்டி போல், கூரான பற்கள் என பார்ப்பவரை முதல் சந்திப்பிலேயே அச்சம் கொள்ளச் செய்யும் முகம்.

இமைக்கு மேலே, வாய்ப்பகுதியில், காலில் என ஆங்காங்கே பழுப்பு வண்ணம் தெளிக்கப்பட்டது போல் திட்டுத் திட்டாய்.

ஆனாலும் சீசர் யாரைப் பார்த்தும் குரைப்பதில்லை, கடிப்பதும் இல்லை.. இது எங்களுக்கும், தெருவில் உள்ளோர்க்கும் மட்டுமே தெரிந்த இரகசியம்.

சீசருக்கு நண்பர்கள் அதிகம். பள்ளி செல்லும் சிறுவர்களும், அத்தெருவில் உள்ள நாய்களும் அவனுடன் விளையாட விருப்பப்படுபவர்கள்.

அவனுக்கும் அது பிடித்துத் தான் இருக்கிறது.

ஒருநாள் நண்பர் ஒருவர் வீட்டிற்கு வந்தார். சீசரைப் பார்த்து அச்சம் அவருக்கு.

‘‘சீசர்.. ஒன்னும் செய்யமாட்டான் உள்ளே வாங்க’’ என்றேன்

சீசர் வெளியே சென்றுவிட்டான்.

‘‘என்ன சாதி நாய்’’ என்றார்.

‘‘நாய்க்கு சாதியெல்லாம் இல்லை இராட் வெய்லர் வகை’’ என்றேன்.

அவன் வெளியில் தெரு நாய்களுடன் விளையாடிக்கொண்டிருந்தான்.

அதைக் கண்ட அவர் ‘‘மத்த சாதி நாய்களுடன் விளையாட விடாதீங்க’’ என்றார்.

சீசரைப் பார்த்தேன். அவ்வளவு மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

நான் ‘‘அவை நம்மைப் போல சாதி பார்த்து பழகுவதில்லை’’ என்று சொன்னேன்.

அதற்குப் பிறகு ஏனோ அவர் சீசரைப் பற்றி பேசவேயில்லை.

# கனவில் வந்த கடற்கரை

ஆயிரம் தென்னைகள்
ஆழ்கடலை வாசித்து
குருத்து மணலில்
குரும்பட்டிக் கவிதை எழுதி
சுத்திகரித்த சுத்தமான காற்றால்
ஒலுவில் மண்ணைத்
தாலாட்டிய இன்பமான காட்சி
இன்றைய கனவில்.

ஊருக்குக் குளிர்ச்சி ஊட்டி
செல்வன் பனையான்
சுங்கானுக்குமகிழ்ச்சி ஊட்டி
கிடுகிளைக்கும் மூத்தம்மாவுக்கு
கரையினிலே வழிகாட்டி
சுதந்திரமாய் வாலிபனைப்போல்
ஓடி வந்து
கடல் மடிசேர்ந்த
நமது அகலமான ஆற்றைக்
கனவில் கண்டேன்.

ஆற்றின் காதலினால்
சேற்று நிலம் பிசுபிசுக்க
பன்காலைக்குள் சிறகடித்த
வெண்கொக்குகள்
இன்று
என் கனவில் சிறகடித்தன.

நூற்றுக்கணக்கான
என் ஒலுவிலான்
வேற்றுமையின்றி
அம்பாச்சொல்லி
தோறாப்பாடு பிடித்து மகிழ்ந்த
அந்த நாள் காட்சி
இன்று என் கனவில் வந்தது.

வெளிச்ச வீடு திறந்த
வரலாற்று விழாவுக்கு
பல்லாயிரம் மக்கள் வந்து
படுத்துறங்கிய
அழகான
அகன்ற கடற்கரையை
கனவில் கண்டு அழுதேன்.

கடல் விழுங்காத
எங்கள் கடற்கரையை
மீண்டும் தரமுடியுமா?
மக்களின் கண்ணீர்
இழப்புக்களை மீட்டு தரமுடியுமா?

இல்லை இல்லை
இன்னுமின்னும் விழுங்காமல்
எங்கள் எஞ்சிய இருப்பையாவது
பாதுகாக்க முடியுமா?
முடிந்தால் கேளுங்கள்
ஒரு வாக்குத் தருகிறேன்.

**ஜே.வஹாப்தீன்**

வெண்பா (ஒன்றில் நான்கு)

அன்னைத் தமிழெனும் ஆகாய மாரியால்
இன்புறும் பூவுலகு என்றென்றும் – கன்னலாய்
மின்னல்போல் பாத்தரும் மீன்களாய் மின்னிடும்
தன்னலம் இல்லாத் தமிழ்

பா. ஜெயசக்கரவர்த்தி
கோவில்பட்டி.

( நான்கு அடியும் சேர்ந்து நேரிசை வெண்பா / நான்கு அடியில் (தனிச்சொல்லுக்கான) கோட்டினை எடுத்து விட்டால் இன்னிசை வெண்பா / நான்கு அடியில் முதல் அடியை எடுத்து விட்டால் சிந்தியல் வெண்பா / நான்கு அடியில் முதல் இரண்டு அடிகளை எடுத்து விட்டால் குறள் வெண்பா )

# முதல் வகுப்பறை

ஓர் ஆசிரியர்
ஒரு மாணவர்
ஒரு வகுப்பறை
தாயின் கருவறை !

பத்துமாத படிப்பில்
போதிப்பாள்
அன்புப் பாடம் !

விளையாட்டும் உண்டு !
உணவும் உண்டு !
உறக்கமும் உண்டு !
கதைப்பாட்டும் உண்டு !
தேர்வுகளும் உண்டு !

பிரம்படி இல்லை !
கண்டிப்பு இல்லை !
விடுமுறை இல்லை !
கட்டணமும் இல்லை !

பூமி உருண்டை தான்...
ஒத்துக் கொள்கிறோம்
கருவறைக்குள்ளே !

உலகம் இன்பமயமானதுதான்
ஒத்துக் கொள்கிறோம்
கருவறைக்குள்ளே !

மனிதப் பிறவி
மேலானதுதான்
ஒத்துக் கொள்கிறோம்
கருவறைக்குள்ளே !

அன்பும் அரணும்
சூழ்ந்ததுதான் உலகம்
ஒத்துக் கொள்கிறோம்
கருவறைக்குள்ளே !

பத்துமாத கல்வி முடித்து
பிரிய மனமில்லாமல்
சுற்றிக் கொள்கிறோம்
தாய்க்கொடி கயிற்றை !

வெளியுலகைக் காண
வெளியேறும் எமக்கு
பன்னீர் தெளித்து
அனுப்புகிறாள்
தாயானவள் !

மகிழ்ச்சி வகுப்பறையை
விட்டுப் பிரிவதால்
வெளியேறுகிறோம்
அழுதுகொண்டு !

பத்துமாத கல்வி முடித்து
வெளியே வருகிறோம்
குழந்தையெனும்
பட்டத்தோடு !
தாயின் இரத்த ஆடை
சூடிக் கொண்டு !

**சா. கா. பாரதி ராஜா**

## துளிப்பாக்கள்

புதுவைக் குமாரி

●

தாகம் தணிக்கும்
காலைக்கதிரவன்
பனித்துளி

●

நிலா முகத்தில்
கரி பூசியது
உலக மயம்

●

ஆணிவேரும்
முடங்கிப் போகிறது
தொட்டிச்செடி

●

மாணவர்களிடமும்
கற்றுக்கொள்கிறார்கள்
ஆசிரியர்கள்

●

இன்பம்
துன்பம்
நாக்கு

●

அச்சமின்றி
இரவில் தனியே வருகிறது
வான்மதி

●



# தேவடியாள்
## தேவர் அடியார்கள்

பூக்காரன்

கோவில் திருப்பணிக்காகவும், சேவைக்காகவும் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்கள் தான் தேவதாசிகள் என அழைக்கப்படும் தேவர் அடியார்கள். இவர்கள் ஆன்மீக இலக்கியம் கோலோச்சி இருந்த ஆறாம் நூற்றாண்டிலிருந்தே மிக மரியாதையாக பார்க்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ள சில அமானுஷ்ய இடங்கள்!!!

காலப் போக்கில் இவர்களது பெயர் மட்டுமின்றி இவர்களது மரபும், கலாச்சாரமும் மரியாதையும் கூட மருவிவிட்டது. போதிய அங்கீகாரம் மற்றும் கவனிப்பு இல்லாமல் போனதால் தேவதாசிகள் மிகக் கீழ்த்தரமான முறையில் சித்தரிக்கப்பட்டனர்.

**தமிழ் மரபு**

தேவதாசிகள் தமிழ் கலாச்சாரத்திற்கும், கலைகளுக்கும் செழுமை சேர்த்த ஓர் சமூக மரபு கொண்டிருந்தவர்கள்.

**தேவதாசி**

தேவதாசி என்பவர்கள் கடவுள் அல்லது கோவிலுக்காக அர்பணிக்கப்பட்ட பெண்கள் ஆவர்கள். இவர்கள் கோவில் மற்றும் கடவுளுக்கு திருப்பணிகள் செய்வதற்காக தானம் கொடுக்கப்பட்டவர்கள்.

**தேவதாசி ஆவதற்கு சடங்கு**

தேவதாசியின் வாழ்க்கை என்பது ஆர்வம் நிறைந்த சுவாரஸ்யமான கதையாகும். ஒரு பெண் தேவதாசியாக வேண்டும் எனில், அவள் சில சம்ஸ்காரங்கள் அல்லது வழிச்சடங்குகள் சிலவற்றின் ஊடாகப் பயணித்து வர வேண்டும் எனப்படுகிறது.

**சடங்குகள்...**

1. சடங்கு பூர்வமான திருமணம்
2. அடையாளப்படுத்தும் புனித நிகழ்வு
3. நிகழ்த்து கலைகளில் ஈடுபடுத்த முன்முயற்சி எடுத்தல்
4. அரங்கேற்றம்
5. கடமைகள் மற்றும்
6. இறுதிச் சடங்காசாரக் கௌரவங்கள்

**கி.பி. 900**

பல கல்வெட்டுகளில் தேவர் அடியார்கள் எனப்படும் தேவதாசிகள் பெருமான் கோயிலில் கலைகளை காத்து வந்தவர்கள் என்றும். நடனம் மற்றும் பாடல்கள் இயற்றுதல் போன்றவற்றில் ஈடுபட்டு வந்தனர் என்றும் பல கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன.

**கி.பி. 1230**

கி.பி 123040க்கு இடைப்பட்ட காலத்தில் இப்போது மகாராஷ்டிரா என அழைக்கபப்டும் நிலத்தை ஆண்ட மன்னன் ராகவாச்சாரியார் தனது குறிப்புகளில் தேவதாசி என குறிபிடப்பட்டுள்ள தகவல்கள் தான் தேவதாசிகளின் தொடக்கமாக கருதப்பட்டு வருகிறது.

**மேகதூத்**

தேவதாசி எனும் இந்த பெயர் முதன் முதலில் காளிதாஸ் எழுதிய மேகதூத் எனும் படைப்பில் தான் குறிப்பிடப்பட்டிருந்தது. தேவரடியார்கள் எனும் பெயரின் பொருளானது தேவர் (இறைவன்) + அடியவர்கள் (சேவகர்கள்), அதாவது இறைவனுக்கு சேவை செய்து வந்தவர்கள் ஆகும்.

**அர்ச்சகர்கள்**

தேவதாசிகள் என்பவர்கள் சமூகத்தில் பெரும் புகழ் மற்றும் மரியாதையுடன் காணப்பட்டவர்கள். கோவிகளில் அர்ச்சகர்களுக்கு அடுத்த இடத்தில் வைத்து பார்க்கப்பட்டவர்கள் இவர்கள் எனவும் வரலாற்று குறிப்புகள் மூலம் அறியப்படுகிறது.

**சமூக சேவைகள்**

தேவதாசிகள் அவர்களது கலைக்கு கிடைத்த பரிசுகளை மக்களுக்கு நல்ல சேவைகளும் செய்து வந்துள்ளனர். கால்வாய் அமைப்பது, கிராமப்புற சேவைகள் செய்வது என நல்ல வாழ்க்கையை நடத்தி வந்தவர்கள் தான் இந்த தேவதாசிகள்

வானும் நிலவும் போல
நானும் நீயும் இனைவோமாக
நட்சத்திரம்
போல் நம் பிள்ளைகள்
ஒளிரட்டும் ...!

ச. இராஜ்குமார்



# ஊசலாடும் அவளுயிர்

அவளின் அலுங்களும் குலுங்களும்
இப்போது வெற்று அசைவுகளானது

முத்துப்பற்கள் ஒவ்வொன்றும்
இப்போது சொத்தைகளானது

கவர்ந்திழுத்த கன்னக்குழிகள்
இப்போது டொக்குகள் ஆனது

அத்தனைச் சொத்தும் பிரித்ததுபோக
இப்போது ஒற்றை மரப்பெட்டியே ஆஸ்தி
ஆனது

பெற்றதும் மற்றதும் பரபரப்பாய்ச் சுழல
முகம்தெரியாத வேட்பாளர்களால் மட்டுமே

ஊசலாடும் அவளுயிர் கொண்டாடப்படுகிறது.
ஆமாம்,
இப்போது அவளிடம் ஆதார் கார்டு இருக்கிறது.

**பாஸ்கர் எம்**
புதுச்சேரி

**விண்ணமங்கலம்**

விண்ணமங்கலம் என்ற கிராமத்தின் நீர்த்தேக்கம் ஆண்டு தோறும் ஆழப்படுத்தப்பட்டு மராமத்துப் பணிகளும் செய்து வரப்பட்டன. நாற்பத்தி எண்ணாயிரம் பிள்ளை மற்றும் அவருடைய சகோதரி மங்கையர்க்கரசி ஆகிய இரண்டு தேவ தாசிகள் ஏரி நீரில் மூழ்கியிருந்த நிலங்களைத் தங்களின் செலவில் மறுபயன்பாட்டிற்குக் கொணர்ந்துள்ளன

**அன்னாடு**

அன்னநாடு என்ற இடத்திலும் அவர்கள் திருந்திகை நதியை மூடச்செய்து, நீர்த்தேக்கத்தைத் தோண்டி ஆழப்படுத்தி, கால்வாய் அமைத்து பின் நிலத்தை மீட்டெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

**ஆங்கிலேயே படையெடுப்பு**

சமூகத்தில் புனிதமாக காணப்பட்டு வந்த இவர்கள், ஆங்கிலேயே படையெடுப்பிற்கு பிறகு தான் களங்கப்படுத்தப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது

**அரசர் கொடுமைகள்**

சில அரசர்கள் மற்றும் சாம்ராஜியத்திலும் கூட கடவுள் திருப்பணிக்காக அர்பணிக்கப்பட்ட இவர்கள், தனிப்பட்ட அரசர்கள் அல்லது பெரும் நபர்களின் இச்சைக்காக இரையாக்கப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

**சாதிப்பிரிவுகள்**

சாதி பிரிவுகள் வரத் துவங்கிய காலக்கட்டத்தில் இவர்கள் இக்காரணம் கண்டு கீழ் சாதி பிரிவில் சேர்க்கப்பட்டனர். மேலும், இவர்கள் காமத்திற்காக மட்டும் காணப்படுபவர்கள் எனும் சாயம் பூசப்பட்டது

**அவச்சொல்**

கடவுளுக்கு இறைப்பணியாற்ற அர்பணிக்கப் பட்ட இவர்கள், சிலரது இச்சை பசிக்கு இரையாகி, இப்போது இவர்களது பெயரே சமூகத்தில் ஓர் அவச்சொல்லாக மாறியிருக்கிறது

# கவலை இல்லாத உள்ளம் வேண்டும்

கவலை இல்லாத உள்ளம் வேண்டும்
கண்ணீர் வராத கண்கள் வேண்டும்,
எல்லை இல்லாத அன்பும் வேண்டும்
எதற்கும் அஞ்சாத ஆற்றல் வேண்டும்.

இன்னல் தந்திடாத இல்லாள் வேண்டும்
இருப்புக்கு ஏற்ற செலவே வேண்டும்,
உண்ணும் உணவில் உழைப்பு வேண்டும்
உயர நினைப்போர்க்கு முயற்சி வேண்டும்.

பள்ளமும் மேடும் சமமாய் வேண்டும்
பார்க்கும் பார்வையில் கருணை வேண்டும்,
வெள்ளம் வறட்சியை மறைத்திட வேண்டும்
வேதனை என்பதை வீழ்த்திட வேண்டும்.

பறவையும் விலங்கும் பக்கத்தில் வேண்டும்
பலன்தரும் மரங்களும் பார்வையில் வேண்டும்,
உறவை வளர்க்கும் உபாயம் வேண்டும்
உன்னத கலைக்கு உயிரும் வேண்டும்.

கோபத்தைக் குறைக்கும் குணமும் வேண்டும்
கொஞ்சி மகிழ்ந்திட குழந்தையும் வேண்டும்,
பாவம் செய்தலைத் தடுத்திட வேண்டும்
பயங்கரம் புகுதலை நிறுத்திட வேண்டும்.

சுற்றம் உறவும் சூழ்ந்திட வேண்டும்
சுகமாய் அனைவரும் வாழ்ந்திட வேண்டும்,
மற்றவர் கருத்தினை மதித்திட வேண்டும்
மாநிலம் தழைக்க உழைத்திட வேண்டும்.

**கவிஞர்.அ.முத்துசாமி**
*தாரமங்கலம்*



# காதல் வாழ்க

சில நிமிடங்கள்
யுகயுகங்களாய் கடக்கின்றன..
கனவில் ஏதோ பிதற்றுகின்றாய்
உயிரைப் பிழியும் கணங்களாய்..
தேடுகின்றாயெனை..

நிலவின் குளிர்ச்சியும்
தீப்பிழம்பென சுட..
காணாத ஓரிரவை காலை வரை
தீர்ப்பது எப்படியோ..?!
ஆழிப்பேரலையாய்
மனமது போராட.. தாளாமல் தவித்து
பஞ்சணையை அணைத்து..

பற்றி எரியும் நெருப்பில்..
நித்தம் தீக்குளிக்கின்றாய்..
தணியாத தாகத்தின் பயனாய்
தொடருமுனது கேள்விக் கணைகள்..

சொல்லவா..எங்கே சென்றேனென்று ?!
உன் இதயத்தை ஆழமாக
தோண்டிக் கொண்டிருக்கிறேன்..
குருதிப் புனலின் வெதுவெதுப்பும் ..
எலும்பும்.. சதையும்.. நரம்புகளும்..

வேகமாக லப் டப் அடிக்கும் எந்திரமதை
தாண்டி உன்னுள் போய்க்
கொண்டேயிருக்கிறேன் பிரமித்து..
ஒவ்வொரு அணுக்களிலும்
என்னை வைத்திருக்கிறாய் சேமித்து..

உயிர் வேர் வரை..
உன்னில் நான்.. என்னில் நீ..
காதல் வாழ்க..!!

**சாரதா க. சந்தோஷ்**
*ஐதராபாத்*

# அழகான நாட்கள்

## R. விஜயலட்சுமி

காலை 7 மணி இருக்கும். தன் தங்கையிடம் இருந்து போன் வரவே தூங்கிய விழிகளை துடைத்துக் கொண்டே, என்ன காலையில போன் என்ற ரோஹினியிடம் ஷீலா, இங்க இரண்டுக்கும் லீவு விட்டாச்சு... வீட்டில ஒரே அடிதடி, என்னால சமாளிக்க முடியல. எனக்கு ஆபிஸ்லையும் லீவு கிடைக்கல... என் மாமியார் காலைல குளிச்சு சாப்பிட்டு டிவிய போட்டாங்கன்னா ஒரே சீரியல் இதுல முத நாள் ராத்திரி பாத்ததெல்லாம் மறுநாள் காலை ரிப்பீட்டு வேற...

ஓ... சரிடி சொல்லவந்தத சொல்லு... ஒன்னுமில்லடி பாப்பாவ மட்டும் அனுப்பி வைக்கிறேன். ஒரு பத்து நாள் பாத்துக்க. முருகன அபாக்கஸ் கிளாஸ், செஸ் கிளாஸ்னு அனுப்பலான்னு இருக்கேன்.

சரிடி அதுக்கென்ன கொண்டு வந்துவிடு என ரோஹினி சொல்லவும் ஒரு நிம்மதி பெருமூச்சு... ஷீலா

ரோஹினிய விட 2 வயது கம்மி... ரோஹினிக்கு திருமணம் ஆகும் போது கல்லூரி கடைசி ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள்... இவளுக்கு திருமணம் முடிந்து முதலில் பெண் சமந்தாவும் பிறந்து, அருண் வயிற்றில் இருக்கும்போது அப்பா ரிட்டயர்ட் ஆகப்போறேன் சீக்கிரம் ஷீலாவுக்கு கல்யாணம் பண்ணனும் எனப்பறக்க... தீவிரமாக திருமண ஏற்பாடு நடந்து சதீஷ் ஐ மணந்தாள்.

ரோஹினி வேலைக்கு போகவில்லை. எனவே குழந்தைகளை சிரமமில்லாமல் வளர்ந்தாள். ஆனால் ஷிலாவின் கணவருக்கு தனியார் அலுவலகத்தில் 25,000 சம்பளத்தில் வேலை. எனவே இவளும் வேலைக்கு செல்வது அவசியமானது. அதனால் மாமியார் குழந்தைகளை பார்த்து கொள்ள அவர்கள் வீட்டோடு... இருந்தார்கள்.

ஞாயிறு காலை திருச்சியிலிருந்து கிளம்பி மதுரையில் இருக்கும் ரோஹினி வீட்டிற்கு ஸ்ரீநிதியை அழைத்து கொண்டு வந்தாள். மதிய சாப்பாடு முடிந்து, ஒரு மணி நேரத்தில் நான் உடனே கிளம்பனும் காலைல ஆபிஸ் போகனும் என ஷிலா கிளம்பிவிட்டாள். சமந்தாவும், அருணும் ஸ்ரீநிதி வந்ததும் குஷியாகி ஒன்றாக டி.வி பார்த்து கொண்டிக்க...

ரோஹினி டிபன் செய்ய உள்ளே சென்றாள்... ஒரு நாள் ஒடியது.மறுநாள் மதியம் சமந்தா, ரோஹினியிடம் வந்து கிசுகிசுத்தாள். என்னம்மா, சித்தி இப்படி அனுப்பிட்டாங்க.. ஊருக்கு வரும்போது இதக்கூட கொடுத்து விட மாட்டாங்களா என முணு, முணுக்க... சரி, சரி நீ பெரிய பொண்ணுதான கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணுடி என ரோஹினி சமாதானப் படுத்தினாள்...



மறுநாள் காலை அருண் வீட்டையே ரெண்டு பண்ணிக் கொண்டிருந்தாள். சமந்தா பஞ்சாயத்துக்கு சென்று சண்டையை தீர்க்க போராடிக் கொண்டிருந்தாள்.

அருண் என்னடா பிரச்சனை என கேட்டவாரே ரோஹினி அடுப்படியில் இருந்து வந்தாள்.

அம்மா என்னோட பெர்மிஷன் இல்லாம எப்பப்பாரு என் போன எடுத்து, games விளையடறா, சாங்ஸ் கேட்டு என்னோட நெட் எல்லாம் காலி பண்றாம்மா... என சொல்லிகொண்டே ஸ்ரீநிதி தலையில ஒரு குட்டு வைத்தான்.

ஸ்ரீநிதி ஒவென அழுதுக்கொண்டே எங்க அம்மாட்ட கொண்டு விடுங்க பெய்யம்மா என அழ ஆரம்பித்தாள்.

அடக்கடவுளே இது என்னடா வம்பாப் போச்சு... இந்த காலத்துல 1½ வயசிலேருந்து எல்லாமே போன வச்சிகிட்டு இருக்கும்போது, ஊரிலேருந்து வரம்போதே ஒரு போன கொடுத்து விடமாட்டாளா... என்று தன் தங்கையை மனதுக்குள் கடிந்தவாறு

ஷிலாவுக்கு போன் செய்தாள். என்னடி இப்படி பண்ணிட்ட, என்னாச்சுக்கா... ஸ்ரீ ரொம்ப அடம் பண்றாளா?

இல்லடி அவளோட போன குடுக்காம போயிட்ட... இதுங்க போன ஸ்ரீ எடுத்து games விளையாண்டா, அருண் சண்டைக்கு போராண்டி...

அட... ஆமாக்கா ஸ்ரீ, போன் இல்லாம, சாப்பிடபோ, தூங்கவோ மாட்டா... நான் அவசரத்துல மறந்துட்டேன்... ஒரு நாள் அட்ஜஸ்ட் பண்ணுக்கா இன்னைக்கே கொரியர்ல அனுப்பிடறேன்

சரிடி... சீக்கிரம் அனுப்பு என்றவள் மூன்று பேரையும் அழைத்துக் கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றாள்.

நாங்கள்ளாம் லீவு விட்ட மறுநாளே திருவையாறுல இருந்த எங்க தாத்தா வீட்டுக்குப் போயிடுவோம். நொண்டி, கல்லாங்கா, கண்ணாமூச்சி எல்லாம் விளையாடுவோம்...

what s கல்லாங்கா மம்மி என அருண் கேட்க... விபரமாகச் சொன்னாள். பல்லாங்குழி, டிரேட், பேங்க்கர்... எல்லாம் விளையாடிட்டு, கூட்டாஞ்சோறு ஆக்கி சாப்பிவோம். ஒரே தட்டில சாப்பாடு போட்டு எல்லாரும் ஒத்துமையா சாப்பிட்டு, ஒண்ணா தூங்குவோம்.

தினமும் ஆத்துக்கு போயி ஜாலியா குளிப்போம்.யாருமே சண்டையே போட்டுக்கிட்டது இல்ல... யாரோட, டிரஸ்ஸா இருந்தாலும் மாத்தி, மாத்தி போட்டுக்குவோம்... சித்திபிள்ளைங்க, மாமா பிள்ளைங்கனு ஒரு 15, 20 பிள்ளைங்க விளையாண்டாலும், என்னோடது, உன்னோடதுன்னு நாங்க சண்டை போட்டதே கிடையாது.

நீங்க ஒரு போன அவ எடுத்து games விளையாண்டான்னு இவ்வளவு பெரிய சண்டை போடுறிங்க? அவக்கிட்ட அரைமணிநேரம் உங்க போன் குடுத்தா விளையாண்டுட்டு திருப்பி குடுத்துடுவா...

நாளைக்கு கடையில போயி பல்லாங்குழி, தாயம், சோழி எல்லாம் வாங்கிட்டு வருவோம். விளையாண்டு பாருங்க... அப்புறம் போன்ல வர்ற விளையாட்டெல்லாம் பிடிக்கவே, பிடிக்காது என சொன்னதை நம்பியும், நம்பாமலும் தலையை ஆட்டிய குழந்தைகளை பார்த்து பரிதாபப் பட்டாள்.

நினைத்துப்பார்த்தாள் கொல்லைப்புறம் இருக்கும் தென்னந் தோப்பின் நடுவில் மணலை தோண்டும் போதே ஊறறெடுக்கும் தண்ணிரை கொட்டாங்குச்சியில் மொண்டு, ஒரு துணியில் வடிகட்டி கூட்டாஞ்சோறு ஆக்க உபயோகப்படுத்தியதை. இன்று 200 அடி தோண்டியும் ஒரு பொட்டு நீர் கிடைப்பதில்லை.

நமக்கு கிடைத்த அந்த விளையாட்டுக்களும், சந்தோஷங்களும், நண்பர்களும், மறுபடியும் வரும் விடுமுறைக்காக காத்திருக்கும். அழகான நாட்களும் காணாமல் போனதே... என்ற ஆற்றாமையுடன் தூங்கிப்போனாள்.

# எத்திசையும் முழங்கிடுவோம்

பையவே பிறநாட்டார் கையசைத்த பொழுதில்
நாவசைத்த மொழியென்றார் கவிக்கோ அன்று
பையப்பைய நடக்கும் அகழ்வாராய்ச்சியில்
பகிரங்கமாய்ச் சான்றளிக்கிறது கீழடி இன்று.

குறுகத் தரித்த குறளில் வள்ளுவத்தின்
குரலோசை மொழிபெயர்ப்பில் உலகெங்கும்.
புறமும் அகமும் காட்டிய பாடல்களில்
பளிங்கென வாழ்வியல் முறைகள் நூலெங்கும்.

அகத்தியம், தொல்காப்பியம், இளம்பூரணம் இன்னும்
அமுதத் தமிழ் வளர்த்த நூல்கள் உண்டு.
முரசு கொட்டித் தமிழ் மணத்த தெருக்களில் இன்றும்
முத்தமிழில் தெருக்கூத்துக் காட்சிகள் உண்டு.

தமிழ் வாழ வேண்டித் திருவிளையாடல்கள்
தமிழேடுகள் காக்கத் தெருவெல்லாம் ஓட்டங்கள்
முச்சங்கங்கள் வைத்துத் தமிழ்ப் படைப்புகள்
முக்கண்ணன், உ.வே.சா., புலவர்கள் பங்களிப்புகள்.

முத்தரப்பும் வளர்த்த மொழி மூச்சுவிட மறந்திடுமோ?
முத்தமிழ்ச் சுவைக்கு ஈடாக வேற்றுமொழி மலர்ந்திடுமோ?
தீந்தமிழின் பெருமைகளைச் சொல்லி வைப்போம்
தலைமுறைகள் மாண்புறவே எடுத்து உரைப்போம்.

கலைஞர், ம.பொ.சி., வலம்புரிஜான் வரிசையிலே
காட்டாற்று வெள்ளமாய்த் தமிழ்முழக்கம் அன்று
கணினி, தொடுதிரை, வளர் தொழில்நுட்பங்களாலே
சுட்டெலி தட்டித் தமிழ்ப் புறக்கணிப்பு இன்று.

காலத்தால் சாகாது காலத்தின் ஏலத்தால் மலியாது
கணித்துச் சொன்னான் அன்று புதுமைப்பித்தன்
தேய்பிறைதான் தமிழுக்கினி வளர்ச்சியில்லை என்று
தேராது சொல்பவன் சிந்தை தெளியாப் பித்தன்.

சோதிமிக்க நவகவிதை தந்த பாரதியும்
தமிழைப் பழித்தவனை விடேனென்ற அவனது தாசனும்
ஏட்டளவில் வாழுகின்றார் மதிப்பெண்ணிற்காக
ஏற்றமிகு தமிழை மீட்டெடுப்போம் மதிப்பதற்காக.

அடிமைப்படுத்தி ஆண்டவனை விரட்டி விட்டோம்
அடிமைப்பட்டு அவன் மொழியிடத்து மாட்டிக்கொண்டோம்
ஆளை வளர்த்தோம்; அறிவை மறந்தோம்
ஆங்கில மோகத்தில் விழுந்து கிடக்கின்றோம்.

மழலைகள் மம்மி என்றழைத்தால் மகிழ்ச்சி
மண்ணுக்குள் பிணம் என்ற பொருள் அறியாததால்.
'பண்ணி'த் தமிழ் பேசினால் நெகிழ்ச்சி
பைந்தமிழ்ப் பெருமைகள் தெரிந்து கொள்ளாததால்.

பகட்டான பல மொழிகள் சலசலப்பிலும்
பத்துத் திசைகளிலும் வளர்மொழி தமிழே.
மேற்கு மொழிகளின் ஊடுருவலிலும்
மேதினி முழுக்கப் பரவு வாசனை தமிழே

குழந்தைகள் பெயரில் தமிழ் இல்லை
கல்விக்கூடப் போதனையில் தமிழ் இல்லை
உள்ளுந்தோறும் உவகை தருமொழி வேறில்லை
தெள்ளு தமிழே தேன்தமிழ்தான் உணரவில்லை

தமிழ் மறந்த விளம்பரப் பலகைகள்
தமிழ்ப் பெயரில்லாத் தமிழ்த் திரைப்படங்கள்
பிறமொழி நச்சு கலந்த தொலைக்காட்சி அறிவிப்புகள்
பெயரளவில்கூட வேண்டாம்; பெருந்தீயிட்டுக் கொளுத்திடுவோம்.

தமிழ் மொழிக்குள்ள தனிப்பெருஞ்சிறப்புகள் போதும்
விருந்தமிழ்தம் எனினும் அயல்மொழி வேண்டோம்.
அயல் நாட்டிலும் ஆதிக்கம் எம்மொழியே
அடுத்தடுத்துப் பகர்கின்றேன், ஐயம் வேண்டாம்.

உருக்கிய வெள்ளிக் குழம்பாய்ப் பனிக்கட்டி
உருகிய நீரைக் கொட்டும் நயாகரா
வரவேற்றிடும் வனப்பு வரிகள் அங்கே:
'வருக வருக' என்னும் வண்டமிழ் வாசகம்.

விண்ணிலே கட்டுகிறது திரிசங்கு சொர்க்கம்
விண்வெளியை ஆளத் துடிக்கும் நாசா மையம்
கல்வெட்டாய்ப் பொரித்திருக்கும் வாசகம் ஆங்கே
'கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு'.

பன்னாட்டு நாட்டாமை ஒன்று உண்டு
பாதுகாப்புச் சபையிலே இடந்தராத மன்று.
கட்டி ஆள்கிறது அங்கும் எம்மொழியே
கணியனின் வார்த்தை, 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'.

திசை தோறும் விளங்கி வரும் தமிழ்ச் சொற்கள்
திகட்டித்தான் போயினவோ சில மூடருக்கு?
'காதருந்தும் கள்ளாம்' தமிழைச் சிதைப்பவர்களென்
கவிதைக் கனலிலே வெந்து மாளட்டும்.

கிணற்று வாளி நில்லாமல் கீழிறங்கினாலும்
பெய்யெனச் சொல்லி மழை பொய்த்தாலும்
பத்தினிதான் நல்ல தமிழ்ப்பெண் நான்
பலித்துவிடும் என்றன் வன்சொற்கள்.

ஆருயிர்த் தமிழினை அறிந்து பழிப்பவர்கள்
அறம் பாடிடுவேன், வீழ்ந்து போகட்டும்.
ஊன் விட்டுயிர் பறக்கும் வரை
உணர்வுக் கூட்டினிலே தமிழ் வாழட்டும்.

தமிழோடு நாங்கள் வாழ்கின்றோம்
தினமும் தாய்மொழி தினம்தான் எங்களுக்கு.
தமிழையே நாங்கள் சுவாசிக்கின்றோம்
தரணியில் எம்மொழியே உயர்வு எங்களுக்கு.

நோக்கும் இடத்திலெல்லாம் தமிழ்ப் பெயர்கள்
கேட்கும் ஒலியிலெல்லாம் தமிழ்ச் சொற்கள்
பாடலாய் உரையாய்ப் பரவும் அலைகள்
பொற்காலம் பிறக்கட்டும்; நற்காலம் வளரட்டும்.

தினமும் புதிய கலைச்சொற்கள் பிறப்பிடம்
தமிழ் இணையப் பல்கலைக் கழகம்
விக்ஷ்னரி திறந்தால் புதுச்சொற்கள் அறிமுகம்
விக்கிபிடியாவில் கலைச்சொற்கள் கற்கலாம்.

உயரிய தமிழ் மண்ணின் பெருமிதம் நனிகூர்ந்து
உயிர் கலந்து உன்னதப் பாமழை பொழிகின்றேன்
நாரா மலரணைந்து கவிமாலை சூட்டுகிறேன்
நற்றமிழே! நாற்றிசையும் கமழ்ந்து வாழி.

மூத்த மொழி வாழி! மூத்த குடி வாழி!
செம்மொழி வாழி! செழும் மொழி வாழி!
வாழிய வாழியவே தாய்மொழி வாழியவே!
வாழியவே! திசைகள் தோறும் தமிழ்மொழி வாழியவே!

**கவிஞர் பா. தென்றல்**
**காரைக்குடி.**



# அமலிசித்தி

**எம்.எம்.தீன்**

மூக்கு திருப்பத்தில் இருக்கும் மேபல் டீச்சரின் வீட்டில் அமலியின் குரல் தெளிவாகக் கேட்டது. மேபல் டீச்சர் அநேகமாக நெட்டலிங்க மரத்தின் உதிர்ந்த இலைகளை வாரிக் கொண்டிருக்கக் கூடும். டீச்சரின் காதுக்கு எட்டக்கூடிய அளவிலான பெரிய சத்தம்தான் அமலியினுடையது.

அமலிக்கும் தெரியும் இன்னும் இரண்டு மூன்று குரல்களுக்குப் பிறகுதான் டீச்சரிடமிருந்து பதில் வருமென்று. மீண்டும் ஒரு முறை கூவியது.

“டீச்சர்ர். அமலி வந்திருக்கேன். கூனி றால் கொண்டு வந்திருக்கேன். அன்னைய விட மூணு பங்கு பெருசு. பவளம் போல இருக்கு. வாங்கோ” என்ற குரல் கேட்டது. இன்று புதன் கிழமை என்று ஞாபகத்திற்கு வந்தது. அமலி புதனும், சனியும் மீன் கொண்டு வரும். எங்கள் வீடுகள் இருக்கும் ‘‘இந்த இடங்களெல்லாம் ஆவாரங்காடாக கிடக்கும் போதே வந்திருக்கேன் சாச்சா” என்பதை வரும்போதெல்லாம் சொல்லிவிடும்.

கால்மணி நேரம் கழித்து எனது வீட்டுக் கதவைத் தட்டும் போது அமலியின் குரல் எங்கள் வீட்டின் இரும்புக் கேட்டில் கேட்டது.

“மேபல் டீச்சர் வந்திருக்கேன்“ என்பதற்கு பதிலாக, “சாச்சா, அமலி சித்தி வந்திருக்கேன்” எனபதுதான் மாற்றம். மற்றபடி அதே பவளம்போல இருக்கு என்பதில் முடித்து சத்தம் கொடுத்தது அமலி.

நான் கதவைத் திறந்து எட்டிப் பார்க்கையில், அமலி என் வீட்டின் ரங்கூன் மல்லிச் செடியின் கீழ் காலை நீட்டி அமர்ந்திருந்தது. நீட்டியிருந்த இடதுகாலில் ரப்பர் செருப்பு இருந்தது. குட்டையான அமலியின் இடுப்புச் சதையில் மீது அழகாக பிள்ளை போல உட்கார்ந்திருக்கும் அலுமினிய மீன் சட்டி. வாய்விரிந்த சட்டியினைச் சுற்றி குண்டுக்கை படரந்திருக்கும். சரிந்தபடி காலை தூக்கி வைத்து, நடக்க முடியாத சிரமத்தோடுதான் இத்தனை தூரம் நடந்து வந்து விடுகிறது. புன்னக்காயலில் மீன் எடுத்துக் கொண்டு பேருந்து ஏறி பாளையங்கோட்டையில் வந்திறங்கி மீண்டும் அரசுஅலுவலர் குடியிருப்பு பேருந்துக்கு மாறி பெருமாள்புரத்தில் இறங்கி பலவீடுகளுக்கும் போய் மீன் கொடுத்துவிட்டு என் வீட்டுக்கு சரியாக எட்டு மணிக்கு இந்த சக்கடா காலோடு எப்படி வந்து விடுகிறது என்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

என்னிடமும், துணைவியிடமும் எப்படியாவது பேசி வாங்க வைத்து விடலாம் என்ற நம்பிக்கை அதன் முகத்தில் இருக்கிறது. ஒவ்வொரு தடவையும் அது கொண்டு வரும் மீனைக் குறித்து பேச்சு ஆரம்பிக்கும்.

“சாச்சா, போனதடவ பணம் கொண்டு வந்து கொடுத்த சின்ன சாச்சி, ரூவாயெ கொடுத்துட்டு இதென்ன மீனுன்னு, வாள மீன பாத்து கேட்டாவெ. சொட்ட வாளக் குட்டின்னு மீன தூக்கிக் காட்டுனேன். பயந்து போய் ஓடிப் போயிட்டா. சின்னவா நல்லா வளந்துட்டாங்களே.” என்று சொல்லிவிட்டு மலர்ச்சியோடு என்னைப் பார்த்து சிரித்தது.

அதற்குள் வெட்டுக்கட்டையை எடுத்து ஓரத்தில் வைத்துவிட்டு மீன்சட்டியின் மீதிருந்த பேப்பரையும், துணியையும் எடுத்துவிட்டு இராலைக் காட்டியது. கொஞ்சம் பெரிய இரால்கள்தான். மூன்று பங்கு பெரிசு இல்லைதான். அத்தனை இரால்களும் சுருண்டு தூங்கிக் கொண்டிருப்பது போலக் கிடந்தன. இரால்களின் தலை, மீசையைப் பார்த்தவுடன் தொப்பியுடன் ஊசியான மீசையை திருகிக் கொண்டே நின்று கொண்டிருக்கும் கனரா வங்கி காவலாளியின் ஞாபகம் வந்தது. ஒரு வேளை அவன் சாப்பிட்டால் அவன் மீசை பெருக்கமாகுமோ என்றும் தோன்றியது.

‘‘என்ன சாச்சா ரொம்ப ரோசனையா இருக்கு”, என்றது அமலி.

“ஒண்ணுமில்லே, இன்னைக்கு மீன் வேண்டா மேன்னு நினைக்கேன்”, என்று நான் சொன்னதுதான் தாமதம், இரால் மீனைக் குறித்து ஒரு கதை சொல்லியது. எப்படி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி ஆவதை பேசி வாங்கி வந்திருக்கிறேன் என்று பெரிய முன்கதை சுருக்கம் சொன்னது.

‘‘சாச்சாவுக்கு நல்ல சரக்கை கொடுக்காம போவக்கூடா தேன்னுதான் செமந்து கொண்டாந் திருக்கேன். படக்குன்னு வாணாம்ங்கிறீங்களே சாச்சா. நல்ல மீனை கொடுக்காட்டி போனா மனசு கெடந்து வாதிக்கும் சாச்சா. மீன தின்னு பாத்துட்டு காசு தந்தா போதும்“

அமலியை யாரும் அவ்வளவு சீக்கிரத்தில் விரட்டி விட முடியாது. அதைவிடவும் அவளது வாழ்க்கை சீரியல் நாடகம் போல தொடரும் ஒன்று. போன வாரம் விட்டுட்டு போன கதையைக் கேட்கத் தூண்டும் விதத்தில் தொடரும். அவளுக்கு யாரிடம் எதைப் பேச வேண்டும் என்றும் தெரியும். அதன் வழியே வியாபாரத்தை நடந்து விடும்.

“சாச்சா, எந்தங்கச்சி தொழில் இல்லாமெ இருக்காளேன்னு காயலபட்டணம் சாச்சாமார் ஊட்டுல மீனக் கொடுன்னு நான்தான் கொண்டு போய் வுட்டேன். அவெ ரால கொண்டு போய் நிறுத்துக் குடுத்துட்டு வந்துட்டா. எல்லா சாச்சாமாரும் அடுத்தாப்பல போவும் போது ஒரு மீனும் வாங்கல. அதுக்கு பொறவுதான் தெரிஞ்சுது. ரால சீர்பண்ணி கொடுக்கமெ வந்திருக்கான்னு. பொறவு என்ன கூப்பிட்டு வுட்டு சொன்னாங்க. நா சாச்சாமாருக்கு அப்படி சுத்தமா கிளீன் பண்ணிக் கொடுத்திட்டு வருவேன்லா. இப்ப பாருங்க. இப்படி ராலை தலையையும் ஓட்டையும் யாரு எடுத்துக் கொடுப்பா. மீசை முள்ளு குத்தினா தேளு கொட்டுன மாரி இருக்கும் சாச்சா.” பேசிக் கொண்டே வேலை நடத்தியது.

அமலிக்கு குழந்தைகள் கிடையாது. ஒரு பெண் பிறந்து ஏழு வயது வரை

இருந்ததாம். ‘‘அதெ ஏன் கேக்கீங்கோ. எல்லாப் பிள்ளைகளோடும் சர்ச் மரத்துல ஏறி விளையாட போயிருக்குது. ஏம்புள்ள மரத்துல மேலேறி இருந்திருக்கு. அந்த வழியா வந்த ஒரு சண்டாளன் புள்ளயளா மரத்துலயா ஏறுதீங்க, இப்ப பாருங்க பங்குதந்தையிட்டச் சொல்லிட்டு வாரேன்னு சொல்லியிருக்கான். அவென் நல்லதுக்குத்தான் சொல்லியிருக்கான். இந்த புள்ளயொ.பயந்து போயி மரத்துல இருந்து குதிச்சி ஓடி வந்திருக்குவொ எம்புள்ளைக்கு தலையில அடிச்சிருக்கு. இது ஊட்டுக்கு வந்த பிற்பாடும் பயந்து போயி சொல்லல. அது தலையில ஆறு.மாசம் கழிச்சி கட்டியாகி ஆப்ரேசம் பண்ணியும் கேக்காமெ செத்துப் போச்சு. அதுக்கு பொறவுதான் இந்தமவன வளப்பு புள்ளயா எடுத்துட்டு வந்து வளத்தோம்“.

“ஏம்புள்ளெ இருந்தா எனக்கு ஏன் இந்த கெதி. அவெ எங்கள வுட்டுறுவாளா”.

“இந்தப் பய அப்போம் கிடந்த கிடை இருக்கே. அதெ சொல்லமுடியாது. அவன் அப்பன் இவனப் பெத்துப் போட்டவ செத்துப் போன பொறவு உவரி ஒரு உப்புகாரிச்சியெ கல்யாணொம் பண்ணிட்டு வந்துட்டான். அவளுக்கும் ரெண்டு புள்ள ஆயிப் போச்சு”.

‘‘இந்த பயல மூக்கு வடிய போட்டுட்டு போயிடுவானாம். புள்ளெ வயிறு பசிச்சின்னு அழுதுச்சின்னா காலால இடறி போட்டுட்டு போயிடுவாளாம் ரெண்டாம்தரத்தாள். புள்ளெ சரியா சாப்புடாமெ கொள்ளாமெ எலும்பும் தோலுமா கிடந்தான். எனக்கு ஒன்னு விட்ட மாமன் பேரன். ஊர்முழுக்க பரிதாப பட்டுச்சுவொ. அந்த ஊர்லதான் எங்க பெரிம்மா மொவ மரியரோஸ் வாக்கப்பட்டிருந்தா. அவெ தான் சொன்னாள். ஏளா உனக்குத்தான் புள்ள இல்லியெ இந்த மச்சாது மொவன எடுத்து வளையம்ளான்னா. எனக்கும் அப்படித்தான் தோணுச்சி. நான் அவெ ஊட்டுக்கு போயிக் கேட்டேனா. அம்புட்டுதான். எப்போம் எப்போம்னு இருந்திருப்பா போல. கேட்டதுதான் தாமசம் ஒடனே தேவாங்கெ தூக்கிட்டு போன்னுட்டா”.

“கில்டனும் அப்படித்தான் இருந்தான். கண்ணு மட்டுந்தான் இருந்துச்சீ. நாங்க தூக்கிட்டு



# முக்கனியின் ஒரு கனியே!

என் வீட்டின் முன்னாடி நிற்கின்றாய்
விண் நோக்கி நேராக உயர்கின்றாய்
கண் பார்த்து இரசிக்கின்றேன் பாராய்
உன் வாசம் சுவைக்கின்றேன் கேளாய்

வளவெங்கும் நிழலாக விரிந்தாய்
உளமெங்கும் குளிராக அமைந்தாய்
வளமாக உனை காத்தேன் அறிவாய்
பழமாகி எனைக்கவர்ந்தே நிறைந்தாய்

விதைநட்ட போதே நினைத்தேன்
வதை உண்ண இருப்பேனா என்றே
கதை முடியவில்லை இன்னும்
சதையாகி எனை மகிழ்வித்தாயே

மரமொன்றை நடுவதின் சிறப்பை
உரமாக விதைப்பதால் இன்பம்
வரமாக எதிர்காலம் நிமிரும்
உரைப்பாயே மனிதமனம் மிளிரும்

அலியார் ஜுபைர்
இலங்கை

வந்து அங்கனயே கடைக்கு தூக்கிட்டு போயி இட்லி வாங்கிக் கொடுத்தேனா. அம்புட்டுதான். ஆவ்ஆவ்னு பெரியமனுசன் கெணக்கா எட்டு இட்லி தின்னுப் போட்டான். புள்ள சரியா சாப்புடாமெ ஏங்கிக் கெடந்திருக்கு"

"ஊட்டுக்கு தூக்கிட்டு வந்து குளிப்பாட்டி, மூக்கு சிந்தி, வாறவழியில எடுத்த புது டிரஸ்ஸ போட்டா அப்படியே எங்கூரு எட்மாஸ்டர் மொவன் கெணக்கா இருந்தான். சண்டாளி, பச்ச மண்ணெ இப்படி ஆக்கிட்டாளேன்னு எம்புருசனுக்கு ஆத்தாமை தீர்ல. ரொம்ப நாளா பயல எங்காவது கூட்டிட்டு போவும் போதெல்லாம் சொல்லிக் கிட்டே இருந்தாரு.'

"சாச்சா, அவுரு அப்படித்தான். சொன்னதையே திருப்பித் திருப்பி சொல்லிக்கிட்டே இருப்பாரு. ஒரு தடவெ ரெண்டு தடவ சொன்னா ஒண்ணும் தோணாது. நூறு தடவைக்கு மேல சொல்லியிருப்பாரு. நாங்க தூத்துக்குடி பனிமாதா திருவிழாவுக்கு போயிருந்தோம். பய அப்பெல்லாம் சினாமாவுல வர்ற பொடியன் மாறி சூப்பரா ஆயிட்டான். அழகா எம்சியாரு உரிமைக்குரல்ல போட்ட டிரஸ்ஸ போட்டு கூட்டிட்டு வந்திருக்கோம். அங்கின அவரு தாய்மாமன் மொவன் ரிச்சர்டு வந்திருக்கான். அவென் பயலப் பாத்து அசந்து போயி நிக்கான். அவென்ட்ட போயி புள்ளை கிடந்த கிடைய சொல்லிட்டு இருந்தாரு. எனக்கு கோவம் வந்துட்டு. கோவம்னா அப்படி இப்பிடி கோவம் இல்ல கடுங்கோவம் வந்துட்டு. ஏம்யா திருப்பி திருப்பி அதை போயி பேசிக்கிட்டே இருக்கீரு. வாயெப் பொத்திக்கிட்டு சும்மா கிடைங்களேன்னு சத்தம் போட்டேன். ஒரு நாளும் எம்புருசனெ அவரு இவுருன்னு சொன்னதில்லே. அன்னிக்கித்தான் சொன்னேன். ஆடிப் போயிட்டாரு. அதையே புள்ள கேட்டுக்கிட்டே இருந்தா, புள்ள மனுசு என்ன பாடுபடும்ன்னேன். அதுக்கு பொறவு அதைப் பத்தி பேசவே மாட்டாரு. என்ன நா பேசுனது சரிதானே சாச்சா.

கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தது. மடிக்குள் வைத்திருந்த வெற்றிலையையும் பாக்கையும் எடுத்து வெளியே வைத்தது. சின்ன ஞெகிழிக் கவரில் இருந்த சுண்ணாம்பை பிதுக்கி வெற்றிலையில் தேய்த்து கட்டை விரலால் வெற்றிலையில் தடவி விட்டு பாக்கைப் போட்டு கடித்தது. பின் வெற்றிலையை போட்டு இரண்டு சவை சவைத்து விட்டு கன்னத்தில் ஒதுக்கிக் கொண்டது. பாதி மீன்களை ஆய்ந்து விட்டிருந்தது.

மீண்டும் தலையை தூக்கி என்னைப் பார்த்தது. நான் கேட்கிற ஆவலில் இருக்கிறேனா என்பதுதான் அந்தப் பார்வைக்கான அர்த்தம். எனது இருப்பு, கதையை தொடரலாம் என்று உணர்த்தியிருக்கும் போல. மீண்டும் சொல்ல எத்தனித்தாள். அதற்குள் கண்களில் நீர்ரசுரந்துதொண்டை அடைத்தது போல ஆகிவிட்டது. முந்தானையை எடுத்து கண்களை துடைத்தாள். தொண்டையை காறிக் கனைத்து வெற்றிலை சாற்றை விழுங்கிக் கொண்டாள். மிடறு இறங்கிவுடன் தொடர்ந்தாள்.

"இனி ரால்மீன் வேணாம் சாச்சி. மீனு கிடைச்சா கொண்டா. இல்லண்னா வேணாம்,யுஎன்றேன்.

"ஆமா சாச்சா, இனி கொண்டாரா மாட்டேன். அந்த மகராசா தெருவில இருக்காரே ரிட்டையர்டு கெட்மாஸ்டர் இம்மானுவல் சார். அவரும் அதெத்தான் சொன்னாரு. அவருக்க ஊர் நாரோவிலு பக்கம். அவுருக்கு கிளாத்தி மீனுதான் புடிக்கும். அது தோலு எருமைமாட்டு தோலு கெணக்கா இருக்கும். அப்படியே ஆட்ட உரிச்சமாரி உறிக்கணும். தோலு செருப்புத்தச்சி போடலாம். ஆனா அப்படி ஒரு ருசி. போவும் பொதெல்லாம் கிளாத்தி மீனு வாங்கிட்டு வாம்ப்பாரு. அந்த ருசி அப்புடி இருக்கும். சாச்சா அடுத்தாப்புல வரும் போது கிளாத்தி மீன் கிடைச்சா வாங்கிட்டு வந்து தாரேன். கத்தி வச்சித்தான் தொலி உறிக்கணும். ஒரு தரம் சாப்புட்டு பாருங்க சாச்சா ருசின்னா அதுதான் ருசி. நீங்க கிளாத்தி மீனுக்கு துட்டுல்லாம் தரவேணாம். தின்னு பாருங்க," என்றது.

எனக்குத் தெரிய என்னிடம் பலதடவைகள் இதையே சொல்லியிருக்கு. ஒருநாளும் கொண்டு வந்ததில்லை. ஆனால், அது கொண்டு வந்து தருகிறேன் என்று சொல்வது, உண்மையாகத்தான் சொல்வதாக ஒவ்வொரு தடவையும் எனக்குப் படுகிறது. சாச்சா எம்மொவன பேச வந்திட்டு எதையோ பேசிக்கிட்டு இருக்கேன் பாருங்கோ. இப்படித்தான் சமயத்துல என்ன பேசுனோம்னு

மறந்து போவுது," என்றது அமலி.

"ஒண்ணும் நினைக்காதீங்கோ சின்னையா. கலிகாலம் முத்திப் போச்சி. நம்ம புள்ளயே நம்ம கண்ணெ நோண்டிப் பாக்குது. ரெண்டு வாரத்துக்கு முன்னே என்னான்னா என் வீட்டுக்காரரை யூனியன் ஆபிசுல போயி அவுரு ஒரு கையெழுத்துப் போடவரணும்னு அவர கூட்டிக்கிட்டு வளப்புக்கிடா கெணக்கா போனான். முந்தாநாளு வானம் தோண்டப் போறேன்னு வந்து நின்னான்'.

"என்னப்பா கம்முன்னு நிக்கிறே கேட்டிருக்கிறாரு. அதுக்கு அம்மையில்லியா கேட்டுருக்கான். அப்போம் பொறவு வாரேன்டு போயிட்டானாம்".

"அவுருக்கு மனசே தாங்கலியாம். எதுக்கு வந்தான் இந்தப்பயன்னு பலதையும் எண்ணி மனசப் போட்டு குளப்பிக்கிட்டே இருந்திருக்காரு. அம்மா திட்டத்துல பணம் தாரேனெனு சொல்றாங்க நம்ம வீட்டு பக்கத்துல கெடக்குற காலியிடத்தை அவன் பேருக்கு எழுதிக் கொடுத்த லோனு பணம் கெடைக்குமுன்னு வந்து நின்னான். அவரும் நல்லாதாப் போச்சு மேக்காத்து கெடக்குற காலிமனையை அவுரு செலவுலேயே எழுத்துக்காரரக் கூட்டி வந்து அவரையும் அளந்து பாக்கச் சொல்லி பத்திரத்தை எழுதச் சொன்னாரு.

அவுரு எழுதச்சொன்னதெ பபாத்துக்கிட்டே இருந்துவிட்டு பத்திரக்கூலி இல்லேண்ணுட்டான். பொறவு அவுரு ஓடி வந்து எங்கிட்டே சொன்னாரு. நா ரெண்டு நாளு பொறுக்கச் சொல்லிட்டு பெருமாள்புரத்துல ஒங்கள மாரி மாராசன் இருக்காரு. அவுரு உடனே பாதி ரூவா இருக்குன்னு பத்தாயிரம் தந்தாரு. இருபது ரூவா வருதுன்னு தெரிஞ்ச உடனே எங்கையில கெடந்த ஒத்தை வளையல அடவு வச்சிக் கொடுத்தேன் பத்திரத்தை போட்டுக் கொடுத்தோம். அவென் பொண்டாட்டி வேற

# தொலைத்த என் முகம்

**பூர்ணிமா கருணாகரன்**



நான் யார்
தொலைத்த
என் முகங்களைத்
தேடத் தொடங்கினேன்..

ஷேக்ஸ்பியர் பற்றியும்
ஓஷோவைப் பற்றியும்
தேட விழைந்தவள்
எப்படி
என்னைத் தேட
மறந்தேன்...

யார் இவர்கள்
இவர்களைத் தேடி
ஓடிய வாழ்க்கையில்
என்னைத் தொலைத்ததை
உணரவில்லை நான்

ஆம்

எல்லோரும்
அப்படித் தான்
தன்னை மறந்து
அடுத்தவனைத் தேடி
நாட்களை
நகர்த்தியபடி.

# கவித்துளி

**எந்திர வாழ்க்கையில்,**
**எஞ்சிய மிச்சங்கள்,**
**உன் அன்பு மட்டுமே...**

ரா. கணேஷ்...
தேவிப்பட்டினம்

நான் சாச்சி கையெழுத்து போடணும்ட்டா. அவளும் கையெழுத்து போட்டா. பத்திரம் போட்டு வந்த மறுநாளே அந்த.எடத்துல கெடந்த எங்க வலெ சாமானத்த எல்லாம் எடுத்து எங்க ஊட்டுப் பக்கம் போட்டுட்டா. அவுக எடமாம். சுத்தப்படுத்துராஹளாம். சரின்னு அவ புத்தி அதுதான்னு வாயைமூடிக்கிட்டு இருந்துட்டேன்.

இந்தப்பய என்னான்னா எங்களுக்கு தெரியாமெ பத்திரத்த வாங்கி யூனியன் ஆபிசுல கொடுத்திருக்கான். யூனியன்காரங்க அவென் அப்பா கூப்புட்டு கேட்ட போது எல்லாம் தெரிஞ்சு போச்சு. அவென் புத்தியே அதுதான்னு வுட்டுட்டோம்..'.

இந்தப் பய நம்ம குடும்பத்துகாரப்பய இல்லே, பாத்துக்க, அவன் மேக்கூருகாரன்வளோட சேர்ந்துக் கிட்டே அலையுதான். அவனுவொப்பத்தி நமக்கு தெரியும். நாட்டுக்குண்டெ வீசுனான், வச்சான்னு கச்சேரி கேசு இழுத்து வுட்டுறுவானுவொ பாத்து நடந்துக்கச் சொல்லு. சாவியோ மாமன் எங்கிட்ட படிச்சிபடிச்சி சொல்லியிருக்காரு. அவென் யாரு சொன்னாலும் கேக்க மாட்டான். சண்டென்னு வந்துட்டா அவென் பொஞ்சாதி புள்ளயளையும் கீழுருக்கு அனுப்பி வச்சிடுவான். ஒழுங்கா மீனுக்கு போனமா வந்தமா. கணக்கா குடிச்சோமா வந்தோமான்னு இல்லமெ அவனுவளோடு சேந்துக்கிட்டு அலையுதான். நமக்கு மனசு கேக்க மாட்டேங்குது. அவென் அய்யாவுக்கு எப்பவோ வுட்டு போய்ட்டு. அவென எப்பவும் கள்ளப்பய குடும்பம்னுதான் திட்டுவாறு. அவனுவளும் அப்பிடித்தான். பின்னே என்ன சொல்ல சும்மா கேட்டுக்கிட்டு இருந்திருவேன் காக்கா.

அவுரு இருப்பாரா. அவுரு பேசாம நாட்டுப்படகுல போயி மீன புடிச்சிக்கிட்டு வந்துகிட்டு இருந்தாரு. இந்தப்பய சேரக்கூடாதவனோட சேர்ந்துக் கிட்டு எங்கேயோ மீனு புடிக்கப் போறேன்னு சொல்லிப் போவ, சிலோன்காரன் புடிச்சிட்டு போயிட்டான். ஒன்றரை மாசம் மன்னார் ஜெயிலுல கெடந்தான். எந்வூட்டுக்காரரெ சும்மாச்.சொல்லப்புடாது. தன் படகெ ஒரு லட்ச ரூவாய்க்கு அடவு வச்சி மீட்டுக் கொண்டாந்தாரு. இந்த பயா நான் பாடுபட்டு அடவெ மீட்டித் தாரேன்னு சொல்லிட்டு ஒத்த பைசா அடமானத்துக்கு கட்டல. அப்படியே நாட்டுக்கப்பலு அடவுல மூழ்கி போயிட்டுது. அப்பமும் இந்த பய ஒண்ணும் பண்ணல. வீட்டுக்காரரு ரொம்ப நொந்து போயீட்டாரு. சரி இனிமே இந்தக் கள்ளப்பயலப் பொறுத்து எதுலயும் ஈடுபடமாட்டேன் சொல்லிட்டாரு. ஏன்னா நாமொ என்னதான் சொன்னாலும் அவென் பொஞ்சாதி கிழிச்சக்கோட்ட தாண்ட மாட்டான். அவா இவனெ முந்தியில முடிஞ்சி வச்சிருக்கா. அவெ அப்படித்தான் இவென் புத்தி எங்கப் போச்சி. எல்லாம் நாங்க கொண்டு வந்த தலையெழுத்து. நம்ம கையில என்ன இருக்கு. எல்லாத்துக்கும் பொதுவா, அந்த கடலுக்குள்ளே இருந்து காப்பாத்திக்கிட்டு இருக்கும் வேளாங்கண்ணி மாதாட்ட பழியெப் போட்டுட்டு வேலயெப் பாத்துக்கிட்டு இருக்கோம். ஆங். சொல்ல வந்ததெ மறந்துட்டு எதையோ பேசிக்கிட்டு இருக்கேன்."

"போனவாரம் ஊரெல்லாம் அலைஞ்சி திரிஞ்சிட்டு. பெருமாள்புரத்துல ஒரு காலத்துல ரெண்டு பெட்டி என்னா, மூணு பெட்டின்னாலும் வித்து போட்டுத்தான் ஊட்டுக்கு திரும்புவேன். இப்பம் முக்குக்கு முக்கு கடையாயிட்டா. அவ்ளோ விக்கிறதில்ல. அதுக்கு ஏத்தாப்ல போன வாரம் சின்ன விளைமீனும், ரோமியோ கெண்டையுந்தான் கிடைச்சது. எல்லாரும் வேணாம்னுட்டாங்க. நான் அலைஞ்சி திரிஞ்சி ஒரு பாடு பட்டு வித்துட்டு ஊருக்கு பஸ்ஸுக்கு ஏறி ரொம்ப கால்வலியோட நடக்க முடியாமெ நடந்து போயிக்கிட்டு இருந்தேன் பகலுல ஊட்டுக்கு போயிச் சேர மூணு மணுயாயிட்டு."

'எதுததாப்ல மொவன் ஓடி வந்தான்.என்னலெ, ஓடி வாரெ. என்றேன் நான்.யுஒண்ணுமில்லேம்மா இஞ்சீனியர் போட்ட பிளான்படி வானொம் தோண்டலாம்னு இருக்கேன். அதான் ன்னு இழுத்தான். செய்ய வேண்டியதுதானேலே.

அப்பாவெக் கூப்பிட்டு பாதரெக் கூட்டிவந்து ஜெபம் பண்ணிட்டு தோண்ட வேண்டியதுதான்ல'.

"அதில்லே. வானம் தோண்டும் போது உங்க வூட்டுல கொஞ்சம் புடிக்கும்னு இன்ஞ்னீயரு சொல்றாரு அதான்ம்மா. அவன் சொல்லுகையில அவென் பொஞ்சாமி ஓரமா நின்னு பாத்துக்கிட்டு இருந்தா. எனக்கு வெக்குன்னு ஆயிட்டு. இதென்னடா இப்படி பேசுறாம்னு."

"என்னடா சொன்னே திரும்பச் சொல்லுன்னேன்."

திரும்பியும் சொல்தான், உங்க வூட்டு சாய்ப்புல கொஞ்சம் தோண்டனும்னு. அதுக்கு மேல அங்கினெ என்னால நிக்க முடியல.கைகாலெல்லாம் பரத்த ஆரம்பிச்சிடுச்சி. வேகமா வூட்டுக்கு போனேன். வீட்டுக்காரரு ஊட்டுக்குள்ள இருந்தாரு, அவர்ட்ட விசயத்த சொன்னேன். அவரு சொன்னாரு, அவெய்ன் மோசடிக்காரப்பயல்ல, அவென் பேச்ச தள்ளுன்னாரு.

இல்லய்யா. காலால்ல தள்ளிப் போட்ட பயலெ தூக்கிட்டு வந்து வளத்து ஆளாக்கி எடத்தையும் கொடுத்து வீடு கட்டுலேன்னா, வானம் நம்ம சாய்ப்புக்குள்ள தோண்டுவானாம். அதுசரி வுட்டுட்டாலும் இந்தப் பய 'உங்கோ வூடு எங்க வூடுன்னு பிரிச்சுப் பேசுதான். எப்படி இருக்கான் பாத்தியளா சாச்சா.

"கள்ளப்பய எப்பவும் கள்ளத்தனத்தோடதான் இருப்பான். அவனெத் தள்ளு. ரெண்டு சள்ளெயெ வித்துட்டு வர இம்புட்டு தேரமாயிட்டா. சீக்கு உடம்புக்காரி நடக்க முடியாமெ வந்திருக்கே., வத்தக் கொளம்பு வச்சி மீனு பொறிச்சிருக்கேன். சீக்கிரம் சாப்புடுங்காரு."

"எனக்கு எதெ நெனச்சி அழ, எதெ நெனச்சி சிரிக்கோன்னு தெரியல சாச்சா'.

"மீனை சீர் ப0ண்ணிக் கொடுத்துவிட்டு எழுந்திருக்க முடியாமல் எழுந்து மீன்சட்டியை இடுப்பில் ஏந்திக் கொண்டு போனாள்.

இறால் முட்களும் மீசைகளும் தெருவில் மினுங்கியபடி கிடந்தன.

# ஹைக்கூ

1. கடவுளின் காலடி
செருப்பாக தேய்கிறது
பக்தையின் பாதம்

2. நூறு நாள் போராட்டம்
கூலியாக....
துப்பாக்கி சூடு

3. கழட்டி விட்டும்
ஜோடி மாறாமல் கிடக்கிறது
காதறுந்த செருப்பு

4. புலி வந்த தடத்தில்
மான் வேட்டை
இறந்தது முயல்

5. வளையல் ஓசை
மெல்ல மறைத்தது
வானவில்

6. இரங்கல் மாலை
சிரித்தபடி அசைகிறது
மயானத்தில்

7. நீண்ட வரிசையில் யாசகன்
குறுக்கே புகுந்தது
கட்டெரும்பு

8. உயிர் சேதம் ஆன பின்பும
சித்ரவதை
தூத்துக்குடியில்

9. நகரும் நிலா
நாலாபுறமும்
ஒரே வெளிச்சம்

10. லேசான மழை
பலமாக நனைகிறது
குழந்தையின் மனம்

11. வெந்த சோறு
வி1ஷமாக மாற்றியது
ஸ்டெர்லைட்

ஹைக்கூ

ஹிஷாலி

# சாமியின் பாகப் பிரிவினை



பம்ப சத்ததின்
பகீரென்ற ஓசையில்
பஞ்சாய் பறந்தது,
பட்டினியானவன்
பழஞ்சோறு சாப்பிடுவதை
விட்டெழுந்து.

முகமெல்லாம் கழுவிகிட்டு
மூன்னு பேர எழுப்பிவிட்டு
மஞ்சள் எடு
குங்கம் எடு
கற்பூரம் ஏத்து
தண்ணீ பிடி என
சுற்றி வளைத்த
சொற்களுக்காக்
சோம்பலிருந்தும்
இல்லாததுபோல் நடித்து,
நயாகராவின் வேகத்தை விட
வேகமாய் ஓடி
வாசல் தெளிச்சு
வெறுந்தெருவை
சலிக்காமல் பாத்திருந்தேன்.

பக்கத்து வீட்டு
மாமியின் வழிமுறையை
பார்த்து பார்த்து
செயலை திரையிட்டு
மனனம் செஞ்சேன்.

பம்ப ஓசையில்
பாதி வீடு பதற
ஓடோடி போய்
ஊத்தன தண்ணீரில்
தன் காலைக்கூட
நனைக்காமல்
திரும்பிய அந்த கோவில் தேர்.

வந்த சாமியை திரையிட்டு
மறைத்து திரும்பிய
தூக்கி வந்தவர்கள்.

பார்க்க முடியாத சாமியை
பார்க்க
எந்தன் வீட்டெதுறே
ஏகபோக கூட்டம்.

கிட்ட வந்த சாமி அமர்ந்திருந்த
தேக்கு மரத்த கூட
தொட்டு பார்க்காத
நான்
இல்லை! இல்லை!
நாங்கள்.

மறைக்கபட்ட சாமியிடம்
மனதிலே வேண்டிக்கொண்டோம்
மறுமலர்ச்சி வேண்டுமென்று.

இறுதியில் ஏதோ ஒரு கூச்சல்
'எல்லை முடிஞ்சுறுச்சுபா
இன்னும் என்ன அங்க வேலை'...

– வீ.ர.சுஜித்ரா
செஞ்சி

காடு, கரை
கழனியெல்லாம்
வேல செஞ்சு
களச்சு வார
எங்கப்பன்
என்னயத்தான்
கண்ணில
காணமின்னு
கத்தியில்ல
அழைப்பாக...
விளையாட
நாளை வாரேன்
விசயாக்கா...
எனச்சொல்லி
விரைவாளோ
இப்பூங்குழலி

## விழி

படம் : ஓவியர். இளையராஜா





## வடிவமைப்பு வேந்தர் வாழ்க!

**வடிவமைப்பு என்னும் உளிகொண்டு பாங்காய்**
**வடிவங்கள் யாவும் செதுக்கிடும் ஆசானே,**
**மாந்தர் பலரை வழிநடத்திச் சென்றிடும்**
**வேந்தர் அமினாரே வாழி!**

**– மலர்மதி**

## வயதான பெற்றோர்

(பரிதாபம் பழுத்த இலைகள்)

அனைத்தையும் கொடுத்துவிட்டு
உதிர்ந்த பழுத்த இலைகள்.
வாழவும் முடியாமல்
சாகவும் முடியாமல்
பூமிக்கும் குடும்பத்திற்கும்
பாரமாகிய நடைபிணங்கள்.
மனதிற்குள் உணர்ச்சிகளை
புதைத்து அழும்
பரிதாப ஜீவன்கள்.
வாழ அனுமதியுங்கள்
வயதான குழந்தைகளை
உணர்வுகளை மதிப்பளித்து
பிரித்து முதியோர்
இல்லம் அனுப்பாமல்.
மரணத்தை தழுவ
உங்கள் மடியினிலே.

கவிச்சுடர்
**பாலக்கிருட்டிணன் வண்ணமுத்து**

# காலாவை விசாரித்தேன்



– மானசீகன்

ஜப்பார் தாத்தாதான் எனக்கு முதன்முதலாக கதை சொன்னவர். அரை பரீட்சை லீவுக்கு அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். மொட்டை மாடியில்தான் தூங்குவேன் என்று அடம் பிடித்தேன். அப்போதுதான் ஏரோப்ளேனைப் பற்றி கதை சொல்ல ஆரம்பித்தார். பேராண்டி! ஏரோப்ளேன்ல கக்கூஸ் உண்டு. ஆனால் அதை திறந்து விட சாக்கடை கிடையாது பார்த்துக்கோ. ஏதாவது ஒரு மொட்டை மாடிக்கு நேரா நின்னு திறந்து விட்ருவான்... பார்த்தியா அதுக்குத்தான் இந்த ஓட்டை'. அதுதான் ஜப்பார் தாத்தா. அவரால் பொய் கலக்காமல் எதையும் சொல்ல முடியாது. நான் அன்று குழந்தையாயிருந்ததால் அதை நம்பினேன். ஆனால் அவருக்கு அதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை. வளர்ந்தவர்களையும் அவர் குழந்தைகளாகவேதான் கருதினார்.

எங்கள் குடும்பத்தில் என்ன விசேஷம் நடந்தாலும் உண்டு முடித்து வெத்தலை பாக்கு போடும் போது யாராவது தொடங்கி வைப்பார்கள். 'மாமு!ர ாசாத்தியம்மா வீட்டுக்குப் போன கதைய சொல்லுங்க' '.உடனே நாலைந்து கெட்ட வார்த்தைகளை வீசியெறிவார். எந்த... மவன் சொன்னான் அது கதைன்னு. நிசம்டா... உயிருள்ள நிசம்.சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவருக்குக் கண்கள் சொருகும்.தான் இறந்த காலத்தில் உருவாக்கி வைத்திருக்கிற கற்பனைக் கோட்டை க்குள் போய் வருவதே அவருக்குக் பெரும் போதைதான்.

'அன்னிக்கு பச்சைத் துண்டு, இந்தா இதே மாரி கைல கொடை.மெட்ராஸ்ல இறங்கி சித்திக் செராய்ல குளிச்சுட்டு நேரா அங்கதான் போனேன். எனக்கு எவனோ தப்பா அட்ரஸ் சொல்லிப்புட்டான். முகவோட காலை சாப்பாடு பெரியம்மா...அதான் தயாளு வீட்ல. இது தெரியாம நான் நேரா ராசாத்தி வீட்டுக்கு போயிட்டேன்.கூர்க்கா மறிச்சான். கொடையெடுத்து ஒரு ஓங்கு.பய சிதறிட்டான்.போலிஸ்லாம் இல்ல. மு.க அப்ப எதிர்கட்சிதேன்.நேரா போய் கொடைக்கம்பால கதவத் தட்டுனேன்... வீட்ல யாருன்னதும் அந்தம்மா வந்துச்சு. பாத்து ரொம்ப நாளாயிப் போச்சுல. அந்தம்மாவுக்கு அடையாளம் தெரியல. நல்லா இருக்கியான்னேன்? அப்பவும் புரியல. கனிப் புள்ள காலேஜ்லயா படிக்குதுன்னேன். அந்தம்மா என்னய ஏற இறங்க பாத்துருச்சு. கேட்ட குரலு.. ஆனாலும் அடையாளம் தெரியல. அது என்ன செய்யும். அதுக்கும், முகவுக்கும் கல்யாணம் பண்ணி வச்ச போது எனக்கு தாடி கிடையாது. தொழுகையெல்லாம் பிறகுதான. அப்ப நான் நாத்திகனா இல்ல இருந்தேன். என்னை தெரியலையா ராசாத்தின்னேன்?

இல்லன்னு குழப்பத்தோடு சொல்லுச்சு. மு.க எங்க போயிருக்கான்னேன். அது லேசா பயந்துருச்சு.நல்லா தெரிஞ்ச ஆளு போல ஆனா யார்னு தெரியலயேன்னு அலமந்து நிக்குது

பாவம். நெசமா யார்னு தெரியல'குரல்லயே அது பரிதவிப்பு தெரிஞ்சது. உடனே ஃபோட்டாவை காட்னேன். அந்த ஃபோட்டோவ நீங்க யாரும் பார்த்ததில்லையா? மு.க வீட்லயும் , பேராசிரியர் வீட்லயும் இருக்கும். இப்பயும் இருக்கு. இரண்டே இரண்டு சேர்தேன். ஐயாவும்,நானும் மட்டும் உக்காந்திருப்போம். பின்னாடி அண்ணாத்துரை, மதி, ஆசைத்தம்பி, சிற்றரசு, அன்பழகன் எல்லாம் நிப்பாங்க. கடைசியா மு.க.அதுல என்னையக் காட்டி இது யார்னேன்? உடனே சொல்லிருச்சு' அது எங்க கம்பம் ஜப்பார்ண்ணே'. நான் தாடிய மறச்சுக்கிட்டு இப்ப பார் ன்னேன். ஜப்பாரண்ணேஏஏ'ன்னு ஓடி வந்து கட்டிப் பிடிச்சுக்குச்சு. மு.க வ பார்த்துக்கோன்னு மாவுருண்டய கைல கொடுத்துட்டு வந்துட்டேன்'. நூறு தடவையாவது இதைக் கேட்டிருப்பேன். ஆனால் ஒவ்வொரு தடவையும் அவர் சொல்லும் போது மெய் சிலிர்க்கும். மு க வும், ரசாத்தியம்மாவும் ஜப்பார் தாத்தாவின் தாடிக்குள்ளிலிருந்து கிளம்பி வந்து ஆவியாகி மறைவார்கள். எல்லாம் முடிந்ததும் யாரிடமிருந்தாவது கேள்வி வரும். அப்புறம் ஏன் நீங்க மந்திரியாகல? உடனே பதில் சொல்வார்

காந்தி பிரதம மந்திரி ஆனாரா? இல்ல அய்யா பெரியார் முதல் மந்திரி ஆனாரா? வானத்துக்கு விளக்கு பிடிக்குதுங்கறதுக்காக நிலாவ வச்சு அடுப்பு பத்த வைக்க முடியுமா? பெரும்பாலும் முடிவு இப்படித்தான். சாக்ரடீஸ் ஜூரம் வந்து உளறுவது போல ஏதாவது ஒரு தத்துவத்தைச் சொல்லி சபையைக் கலைத்து விடுவார்.

சில சமயங்களில் தன்னுடைய பொய்க்கு இராணுவ ரகசியம் மாதிரி பில்டப்பெல்லாம் வேறு கொடுப்பார். அந்த மாதிரி மேட்டர்களை சபையில் அவிழ்க்க மாட்டார். தனிமையில்தான்.அவரவரின் அறிவுத் தரத்திற்கேற்ப அள்ளி விடுவார். என்னிடம் ஒரு தடவை இப்படி ஆரம்பித்தார். நேருவுக்கு அடுத்து மு.க தான் பிரதமர் ஆயிருக்கனும். எனக்கு என் மக மேலயோ, காமராசர் மேலயோ நம்பிக்கை இல்லை. நீதான் பிரதமராகனும்னு மு.க கிட்ட கேட்ருக்கார்.மு.க ஒத்துக்கலை. உடனே இந்த ரகசியம் வெளில போயிரக் கூடாதுன்னு மு. க கிட்ட சத்தியம் வாங்கிட்டார். மு.கதான் இதை என்கிட்ட சொன்னது. அண்ணாத்துரைக்கே தெரியாதாம். சத்தியம் வாங்கிட்டுதான் சொன்னார்.

# பாரியன்பன் – கவிதைகள்

■

எண்ணிமுடித்த
விரல்களாயினும்
எண்ணிக்கை கூடும்
பட்சத்தில் மறுபடியும்
எண்ணிக்கையில் வரும்.

■

மிதிட்ட புல்
நெஞ்சை நிமிர்த்த
சற்றே காலதாமதமாகும்.

■

எனக்குத் தெரிந்ததை
எல்லாம் உன்னிடம்
சொல்லிக் கொள்வதில்
நமக்குள் காலவிரையம்
மட்டுமின்றி பேரிழப்பு
ஒன்றுமில்லை.

■

என்மீது
விழுந்த மழைத்துளிகள்
காதலில் விழுந்த உன்னை
பின்பொருநாள்
உன்மீதும்
விழுந்து வதைக்கும்.

■

உன்னுதட்டின் நிறத்திற்கு
எந்தப் பூவிடம் சாயத்தை
கடன் வாங்கினானோ தெரியவில்லை
பிரம்மன்.

■

வானம் எழுதிமுடித்த
அத்தனை
மழைக்கவிதைகளையும்
தம்மிலைகளின் வழியே
கடைசியாய் உதிரும்
மழைத்துளிகளால்
முற்றுப்புள்ளி வைத்து
முடித்து வைக்கிறது
மரங்கள்.

*பாரியன்பன்*
குடியாத்தம்,

இப்ப நீ எனக்கு பண்ணு. இல்லாத ஒரு விஷயத்திற்காக நான் அவரிடம் சத்தியம் வேறு பண்ணியிருக்கிறேன். கலைஞர் ஏன் வேணாம்னார்னு கேட்க வாயெடுத்தேன்'. தண்ணி ஒண்ணுதான். அது அங்க ஓடுனா கங்கை. இங்க அதுக்குப் பேரு காவேரி. பிறகெதுக்கு அங்க போயி குடிக்கனும்?' அவர் சொல்லப் போகும் அந்தத் தத்துவத்தை எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். அதற்கடுத்து எங்கு பார்த்தாலும் எச்சரிப்பார். பேராண்டி விஷயம் பெரிசு.மூச்சு விட்ரக் கூடாது. காங்கிரஸ்காரன்லாம் விஷப்பயலுக. நானும் தலையாட்டி வைப்பேன்.

கம்பத்திலும் விநாயகர் ஊர்வலங்கள் துவங்கியிருந்த நேரம். மறுநாள் ஏதோ ஒரு விருந்தில் ஆரம்பித்து விட்டார்.நேற்று கடைவீதிப் பக்கம் போனேன். மொத்த Rss காரனும் வந்து கும்புடறானுக மாப்ள!வாழப்பழம்,தேங்கான்னு ஒரே உபசரிப்பு.

ஆலோசனை சொல்லுங்க ராவுத்தரேன்னானுக! ஒண்ணுதேன் சொன்னீ. முருகன்தான் ஊர் சுத்தப் பிரியப் படறவரு. விநாயகர் சைலண்ட் பார்ட்டி. பழத்தையே குறுக்கு வழில அடிச்சவர். அதுனால புள்ளயார மலை மேல நிப்பாட்டிட்டு முருகன ஊர் சுத்தி காட்டுங்கண்ணேன்.

'எவனும் சாத்தலையா'?'

எவண்டா அது கிறுக்குப் பயமகன்? ராமகோபலன் அய்யர்ட்ட சொல்றேம்னு மரியாதையா சொன்னானுகடா. இந்நேரம் அந்தாளுக்குத் தகவல் போயிருக்கும்.அவனுக வேறயா இருந்தாலும் நல்ல மரியாதையான பயலுக.துலுக்கனுக மாதிரி வெடிச்சவனுக இல்ல. அது கேள்வி கேட்டவன் மீதான கோபம். தனியாக இருக்கும் போது அவர் கண்களைப் பார்த்துக் கொண்டே கேட்டேன். 'அது அடிகளார் சொன்னதுதானே'? ஒரு நிமிடம் அமைதியாக இருந்தார். பிறகு உரத்த குரலில் கேட்டார்.' ஒக்கால ஓலி அடிகளாரா ஒனக்கு தாத்தன்?.' இருவருமே சிரித்து விட்டோம்.

அவருடைய திருவிளையாடல்கள் ஊரோடு நிற்கவில்லை. தெருவிலும் ஏதாவது செய்வார். ஏதாவது ஒரு வீட்டுக்குப் போய் அந்த வீட்டுப் பொம்பளக கிட்ட டீ போடச் சொல்லி விட்டு 'ஓம்புருசன உப்புத்தருசுல பார்த்தேன்னு 'பிட்ட போட்டுட்டு வந்துடுவார். 'உப்புத்தருசு' என்பது பலான சங்கதிகள் நடக்கும் இடம்.ரெண்டு பேரும் முட்டி மோதி பிரியற லெவலுக்குப் போகும் போது இவரே பஞ்சாயத்தில் உக்காந்து வடையோடு டீ கேட்டு வாங்கி உறிஞ்சிக் குடிப்பார். குடித்த கையோடு தம்பதிகளை சேர்த்து வைத்து விட்டு வருவார். ஜமாத் பொறுப்பாளர்கள், ஆலிம்சாக்கள் எல்லோருமே அவரைக் கண்டால் தெறித்து ஓடி விடுவார்கள். யாரோடு யாரைக் கோர்த்து விடுவார் என்று பல நேரங்களில் அவருக்கே தெரியாது.

என்னை 'புளுகனிப் பயலே' என்றுதான் கூப்பிடுவார். நான் கவிதை எழுதுவதை கேள்விப்பட்டதில் இருந்து இதுதான் எனக்கான பட்டப் பெயர். 'கவிஞர்கள் பொய்யர்கள்' என்பது அவரது தீர்க்கமான அபிப்ராயம். அப்ப உங்க மு.க யாரு? என்று வம்பிழுப்பேன். எல்லா ஆறும் தனித்தனியா இனிப்புதான். ஆனா கடலுக்குப் போனா எல்லாம் கக்கிதுல.

இப்ப எதுக்கு இந்த பழமொழி?

மு. க வ பத்திப் பேசாத என்று முடித்து விடுவார்.

அவருக்கு நான்கு மகன்கள்.ஒரே மகள். மகள் மீது ரொம்பப் பிரியம். ஆசை ஆசையாய் ஒரு கண்டக்டருக்குக் கட்டிக் கொடுத்தார். நாப்பதெல்லாம் முடிஞ்ச பிறகு ஒரு நாள் பஸ்சில் வைத்து மருகனைப் பார்த்திருக்கிறார். அவர் கண்டக்டர் அல்ல டிரைவர். பஸ்ஸிலேயே அடிக்கப் போய் விட்டாராம். ஒரே அழும்பு. மகளை உடனே வரச் சொல்ல நூர்ஜான் காலாமறுத்து விட்டது. அன்றிலிருந்து மருகனிடம் பேச்சு வார்த்தை இல்லை. இதுல என்ன இருக்குன்னு யாராவது கேட்டு விட்டால் போதும். பிரளயமே நிகழ்ந்து விடும். 'பொய் இல்ல சொல்லியிருக்கான் படுகாலி. பொய் அடுக்குமா? அல்லா, ரசூல் ஏத்துக்குவாஹலா? பொய் சொன்ன நாக்குக்கு என் வீட்டு பிரியாணி கேக்குதோ? அவனுக்கு சொர்க்கத்து கதவு மட்டும் இல்ல, இந்த ஜப்பார் வீட்டுக் கதவும் திறக்காது. கண்டக்டரும், டிரைவரும் ஒண்ணா? தாயழி! எவண்டா

சொன்னான்? கண்டக்டர் யாரையும் ஏத்தலாம் இறக்கலாம். அவன்தேன் பஸ்சுக்கு அத்தாரிட்டி. இவன் நில்லுண்ணா அவன் நிக்கனும். எடுண்ணா எடுக்கனும். இவன் முதலமைச்சர்ணா அவன் கவர்னர். ஆட்டுக்கு தாடி தேவையோ? இல்லையோ ஆனா கொம்பு வேணும். கண்டக்டர்தான் கொம்பு. ஆமா... அவன்தேன் கொம்பன். எல்லாம் விடு. காசு யார் கைல இருக்கு? அன்ன முகம்மது இவன்ட்டதான. அவன் கைல என்ன... இருக்கு? வெறும் இரும்புதான? ரெண்டாவது, டிரைவர் ஒக்காந்தே போறவன். இவன்தேன் ஓடியாடி வேலை செய்றவன். உக்காந்தே கிடக்குறதுனால மேற்படியானுக்கு மூலம் வந்துரும். என்னாது வந்தா என்னவா? ஒக்கால ஓலி மூலம் வந்த பய பொண்டு புள்ளையோட சந்தோஷமா இருக்க முடியுமா? சூட்டுலே கிடக்கிறதுனால புள்ள லேட்டாகும்... இந்தா ஆயிருச்சா? நாஞ் சொன்னா சரியாத்தேன் இருக்கும். எல்லாம்விடு பஸ்சு எங்கயாவது மோதுனா கூட அவன்தானே முதல்ல சாவான்? கண்டக்டருக்கென்னா ராசா கணக்கா பையோட கீழ குதிச்சிருவான். பூவும், பொட்டும் அழிஞ்சு மூலைல கண்ண கசக்கி

# சுயமற்ற நிறபொருத்துகை

குண வர்ணக்கலவைகளின்
சேர்க்கைதான் அவள்
ஏன் நானும் தான்

வானவில் வர்ணங்களை
இரசிக்கும் நானோ
அவளின்
வர்ணப் பொருந்துகைகளை
இரசிப்பதில்லை

எனது வர்ண பொருந்துகைகளின்
விம்பமாகவே
அவளை என்முன்னே
நிறுத்தப்பார்க்கின்றேன்

அவள்
நிறங்களின் சேர்க்கைதான்
என்பதை ஏற்கும் நான்
அவளிடம்
என் நிறச்சேர்க்கைகளின்
பிரதிபலிப்பை
அதிகம் எதிர்பார்த்து
ஏமாறுகின்றேன்

அவள்
என்பது ஒரு சுயம்
தன் சுயத்துடன் இருக்கையில்
வர்ண மாறுதல்களும்
சுயமாகத்தான்
அன்பு காதல் ஆசை என்னும்
தளைகளைக்கொண்டு
அவளை கட்டி
என் நிறப்பொருத்துகை
வட்டத்துக்குள்
அவளை அமிழ்த்திவிட
முயற்சிக்கையில்தான்

என் சுயம்
விழித்துக்கொள்கின்றது
அவள் என்பதும் தனி
நான் என்பதும் தனி
நமக்கான பொருந்துகைகள்
சிலசமயங்களில் நெருடத்தான்
இருக்கும் கட்டாயம்
செய்யத்தான் வேண்டும்
இல்லாவிடில்
இருவரில் ஒருவர்
சுயமற்ற
நிறபொருத்துகைகளை
பிரதிபலிக்கும்
கண்ணாடியாக மாறிவிட்டோம்
என்பதே உண்மை

பார்க்கும் கோணத்தில்
நெருடல்களான
பொருந்துகைகளும்
ஓர் அழகுதான்

**துளசிதன்**

நிக்கவா நான் நூர்ஜான பெத்தேன்? சம்பளம் ஒண்ணுதேன். ஆனா ரெண்டும் வேற வேற. அது ஆணைன்னா இது கழுதை. ஒரே புஸ்தகத்துல படமா வந்துட்டாப்ல ரெண்டும் சமம் கிடையாது.

எனக்கு அவர் கோபமும் அதற்கான தர்க்கங்களும் நகைப்பை வரவழைக்கும். ஆனால் அதில் அவர் ரொம்ப உறுதியாய் இருந்தார். ஏதாவது விஷேஷத்தில் மருமகன் தெரியாமல் பக்கத்தில் உட்கார்ந்து விட்டால் கூட உடனே எழுந்து போய் விடுவார். அவரது குணச்சித்திரத்திற்கு இந்த வேஷம் பொருந்தவேயில்லை. கோட்சூட், சூவெல்லாம் போட்ட பிறகு முகத்தில் வைத்துக் கொண்ட மரு போல் இந்த விஷயம் அவரோடு ஒட்டாமலே அவரால் நிகழ்ந்து வந்தது.

எழுபது வயசுக்குப் பிறகுதான் படுக்கையில் விழுந்தார். மருமகள்கள் பீ, மூத்திரமெல்லாம் அள்ள மாட்டேன் என்று அடம் பிடிக்க மகள் வீட்டுக்கே போக வேண்டியதாகி விட்டது. நூரம்மா அவருக்கு முன்னாடியே வாவரசியாகப் போய்ச் சேர்ந்து விட்டது. நான் அவரைப் பார்க்கப் போன போது மருமகன் கைத்தாங்கலாக பாத்ரூமிலிருந்து தூக்கி வந்தார். அவரது கை ஈரமாக இருந்தது. அநேகமாக அவர்தான் கழுவி விட்டிருக்க வேண்டும். நூர்ஜஹான் காலா ரேசன் கடைக்கு போயிருந்தது. அந்த டிரைவர் அவசர அவசரமாக என்னைக் கேட்காமலே டீ வாங்க ஓடி விட்டார். தாத்தாவை உற்றுப் பார்த்தேன். வேறு யாரோ மாதிரி இருந்தார்.ஆனால் கண்களில் மட்டும் அதே குறும்பு.' என்னா பாக்குற? தாக்கத்து இல்லாததுனால இவன மன்னிச்சுட்டேன்னு நினைக்கிறியா? அதெல்லாம் ஜப்பாரு கிட்ட நடக்காது. இப்ப அவன் டிரைவர் இல்ல. கண்டக்டர். நான்தான் மு.க கிட்ட பேசி மாத்தி விட்டுட்டேன். அவனுக்காக இல்லாட்டியும் அந்தப் பொட்டைக் கழுதைக்காக செய்யனுமில்ல. ஆனா ஒண்ணு... கண்டக்டர் ஆன பிறகுதான் இங்க கால் வச்சேன். ஒங்க தாத்தனுக்கு பொய் பிடிக்காது உனக்கே தெரியும்ல. நா அன்னிக்கே சொன்னேன்ல. கல்யாணம் ஆயி பன்னெண்டு வருசத்துக்கப்புறம் இவன் கண்டக்டர் ஆன பிறகுதான் நூர்ஜானு உண்டாயிருக்கா. இது நாலாவது மாசம். நா ஏன் தலைல அடிச்சுக்கிட்டேன்னு இப்பவாவது புரியுதா? ஆனால் ஒண்ணு... ஆசிர்வாதம் மாதிரி சொல்றேன். பொய் கூடாது. அது குடும்பத்த அழிச்சுரும் சரியா? அதற்குள் அந்த டிரைவர் சாரி சாரி கண்டக்டர் வந்து விட்டார். டீயை ஆற்றிக் கொடுத்தார். தாத்தாவுக்கு ஆறிய டீயில் ரஸ்க்கை முக்கி ஊட்டி விட்டார். கண்டக்டர் ஆகிட்டீங்களாம்ல? தாத்தாவைப் பார்த்துக் கொண்டே கேட்டேன். 'ஆமா தம்பி.. மாமா ஏற்பாடுதேன்'. ஊட்டி விட்டுக் கொண்டே பதில் சொன்னார். நான் தாத்தாவைப் பார்த்தேன். அனிச்சையாய் கால் மேல் கால் போட்டுக் கொண்டார். 'வர்றேன் தாத்தா'. அடிக்கடி வாடா? இது நம்ம வீடுதேன். நூர்ஜானுக்கு ஒங்க தாத்தன் சீதனமா கொடுத்தது'. காலாட்டிக் கொண்டே விடை கொடுத்தார்.

அதற்கடுத்த வாரமே அவர் மாப்பிள்ளையை பஸ்ஸில் பார்த்தேன். இருவரும் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. டிக்கெட் எடுக்க வேண்டாம் என்று முதலிலேயே சொல்லி விட்டார். ஓரிரு தடவை சிரித்துக் கொண்டோம். இடையில் ஒரு தடவை குடிக்க தண்ணீர் தந்தார். என்னுடைய ஸ்டாப் வந்ததும் சொல்லி விட்டுதான் இறங்கினேன். நூர்ஜான் காலாவை விசாரித்தேன். ஏதோ நினைவில் தாத்தாவை விசாரிக்க மறந்து விட்டேன். ஆங்... இதைச் சொல்லவில்லையே உங்களிடம்? அந்த பஸ்ஸை அவர்தான் ஓட்டிக் கொண்டிருந்தார். ■

## இதய வாசல்

**ஆலய வாசலில் நான் நுழைந்து**
**ஆண்டவனை அங்கு கண்டேன்**
**ஆனந்த வாசலில் நான் நுழைந்து**
**அகிலமும் நான் அறிந்தேன்**

**பூந்தோட்டத்தில் நான் நுழைந்து**
**பூ மணம் நான் நுகர்ந்தேன்**
**பூ விழி நுழைவேனா**
**புன்னிதழ் நகை கொள்ள**

**மான் விழியில் நுழைவேனா**
**மங்கை உன் மனம் அறிய**
**இமை மூடி ரசிக்கின்றாயே**
**இடமுண்டா இதயத்தில்**

**எ.தங்கமணி**

# தன்னம்பிக்கை

கீர்த்தனா

உலகில் தன்னம்பிக்கை என்ற வார்த்தை பலருக்கு தெரியாமலே போயிற்று... அதனால் தான் இன்றைய உலகம் முயற்சி என்னும் வார்த்தையை மறந்து வாழ்கிறது..

காலத்தின் மீது பழியை போட்டுக் கொண்டு இன்று பலர் அது நடந்து விடும் இது தானாகவே நடந்து விடும் என்று சொல்லி சொல்லி தன்னை தானே நம்பிக்கை இன்றி வாழும் வட்டத்தில் வடிவமைத்து கொள்கிறார்கள்... கேட்டால் காலம் பதில் சொல்லும் என்ற கட்டாயத்தில் அவர்களை மட்டுமல்லாது பிறரையும் தள்ளுகிறார்கள்...

நம்பிக்கை இருந்தால் முயற்சியில் பலன் மட்டுமே... ஆனால் இன்றைய சமூகம் நம்பிக்கையை அடிப்படையாகக் கொள்ளாமல் சூழ்நிலையை குத்தம் சொல்லுகிறது..எங்கே போனது மனிதனின் இயல்பு...

எப்போது வரும் வெற்றி என்ற கேள்விக்கு பலரிடம் இன்று பதில் இல்லை... ஏனென்றால் அதை நாம் தேடிச் செல்லவே தயாராக இல்லை.. காரணம் நம்மளிடம் விடாமுயற்சி ,நம்பிக்கை ,கடின உழைப்பு இவை எதுவுமில்லை... ஏதேனும் ஒன்றை உறுதுணையாக வைத்தால் கூட வெற்றியின் முதல் படி தொட்டுவிடலாம்...

நீ முயற்சி செய்...உன்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையை தக்கவைத்துக் கொள்... பிறகு சிந்தித்து பார்க்க உன்னை குறை கூறும் உ ன் முயற்சியை கூறும் சில மானுடர்களை... அங்கே உனக்கு சிந்தனை தெளிவாகும்... குறைகளை குறைத்து நிறைகளை அதிகமாக்க வழி பிறக்கும்... குறைகளையும் நிறைகளாக பார்க்கும் மனோபாவம் கிடைக்கும்...

தனக்குள் இருக்கும் மனக்குறைகளை புரிந்து எவர் செயல்படுகிறானோ அவரே தெளிவான பக்குவத்தில் நல்ல மனப்பான்மை மிக்க சிறந்த பண்பாளராக உயர்வார்...உன் குற்றங்களை ஒற்றுக் கொள் நம்பிக்கை தானாக உருவாகும்...

வெற்றியும் வேண்டும் வாழ்க்கைக்கு ஆனால் தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் வேண்டும்... அது இன்றைய இளைஞர்களுக்கு துளி கூட இல்லை... பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் விதம் தவறு இல்லை... விதமாக வளர்ப்பதே தவறு... வெற்றி அடிக்கடி வராது என்று சொல்லும் பெற்றோர்கள் எத்தனை பேர் உள்ளார்கள்... அதனால் தான் குழந்தைகள் தோல்வியை ஏற்றுக் கொள்ள மறுத்து தன்னுடைய வாழ்க்கையை விரைவில் மாய்த்துக் கொள்கிறார்கள்...

“விட்டுக் கொடு சிகரம் தொடு”

இந்த மாதிரியான சில வார்த்தைகள் பண்பிற்கே உரித்தான அருமையான வார்த்தைகள்... எப்படினு நம்முள் பலர் இன்றுவரை கேள்வியாக பார்க்கும் மனப்பான்மை தான் நாளடைவில் போட்டி பொறாமையாக மாறி அடி தடி வெட்டு குத்துனு மாற்றம் அடைகிறது... வெற்றியை விட்டுக் கொடு தோல்வி உன்னை அடையும்... ஆனால் நல்ல பண்பு உண்டாகும்... தோல்வியை விட்டுக் கொடு வெற்றி உன்னைச் சேரும் எப்படி?? பலரின் சாபமாக வந்தடையும்... முன்னுக்கு பின் முரணாக இருக்கும் வாழ்க்கை ஒரு நாள் நம்பிக்கையை இழந்து வெறுமனே காட்சியளிக்கும்....

தகுதிக்கே இன்று வேலை என்ற நினைப்பில் பலர் தாழ்த்தப்பட்டவராக கருதி வேலைக்கு செல்லாமல் தன்னம்பிக்கை இல்லாது, ஆம் தன்னுடைய நம்பிக்கையை காற்று போல் பறக்க விட்டு பின் மே மாத வெயிலில் குளிர்ச்சியை தேடுவது போல் தேடுகிறார்கள்... வேலைக்கு

செல்லும் இடங்களில் நீ என்னச் செய்கிறாய் என்று யாரும் பார்ப்பதில்லை... இதற்கு முன் என்ன செய்தாய் என்றே பார்க்கிறார்கள்... உண்மை தானே உன் பின்னணி அறிந்தால் தானே உன் நம்பிக்கை பற்றி உழைப்பு பற்றி முயற்சி பற்றி யாவரும் அறிவார்....முயற்சி செய் வெற்றியை உனக்கு உரியதாக்கு...

## தந்தைக்கு ஒரு தாலாட்டு!

**பத்துமாதம் வயிற்றுக்குள்**
**பத்தியமாய்ச் சுமக்கவில்லை**
**சித்தத்தில் உன்நினைவைச்**
**சிறிதேனும் இறக்கவில்லை!**

**தாலாட்டிப் பாலூட்டிப்**
**பார்த்திருந்தே இரசிப்பதில்லை!**
**ஆளாகி நீஉயர**
**அறிவுருத்த மறப்பதில்லை!**

**உயிரிருந்தால் போதுமென்ற**
**உணர்வுடனே இருப்பதில்லை!**
**உயிருக்குள் உனைவைத்த**
**உள்ளுணர்வைச் சொல்வதில்லை!**

**தந்தையிவர் எனக்காட்டும்**
**தாய்மட்டும் உயர்வில்லை!**
**சிந்தையிலே சிறைவைத்த**
**தந்தைக்கோ நிகரில்லை!**

**பாவலர் அருணா செல்வம்**

தன்னம்பிக்கை கொண்ட யாராக இருந்தாலும் தன்னுடைய செயலில் துணிவும் நாவில் மென்மையும் கோபத்தை குறைத்து கொண்டும் தன்னுடைய வழியிலே பிறரையும் நல்வழிப்படுத்தவார்... எனவே நம்பிக்கை வாழ்வின் மிகப்பெரிய அங்கீகாரம்....

எண்ணம் போல் வாழ்க்கை என்பது பல நேரங்களில் உண்மையாகிறது... அதனால் எண்ணத்தில் தன்னம்பிக்கையும் தைரியமும் செயலில் முயற்சியும் கடின உழைப்பும் கொண்டு நீ நீயாக செயல்படு... மற்றவரை பார்த்து பொறாமை கொள்ளாது உனக்காகவே வாழாமல் உன்னை நம்பும் சிலருக்கு உறுதுணையாக இருந்து வாழ்க்கையில் தோல்வி வெற்றி எல்லாவற்றையும் சரிவர பகிர்ந்து நல்லதோர் பயணத்தில் நயமான வாழ்க்கை வாழ்ந்திடு..

“ஒல்வது அறிவது அறிந்து அதன்கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாது இல்”
(குறள் 472)

தன் திறமையை வளர்த்துக் கொண்டு நம்பிக்கையுடன் வாழுபவர் யாராக இருந்தாலும் ஒருபோதும் பின்தங்காது நம்பிக்கையுடன் வாழ்வீர்....

விக்ரம் சாராபாய் மற்றும் அப்துல்கலாம் ஐயா அவர்கள் நினைக்காவிட்டால் இன்று செயற்கைக்கோளை ஏவிற்க முடியாது.. அப்துல்கலாம் ஐயா சொன்னதை போல் “முடியும் என்றும் நினைக்கும் வரை நாம் ஒன்றையும் சாதிக்க முடியாது”.. நம்பிக்கையுடன் விரட்டுங்கள் வீரத்தை பரிசாக்கி கொள்வதற்கு..

தெளிவான எண்ணங்கள் நேர்மறை சிந்தனையை தூண்டும் விதமாக அமையும்.. உறுதியும் தன்னம்பிக்கையும் சிந்தனையில் உதித்து பிறர் போற்றும் வகையில் ஆகச் சிறந்தவனாக திகழ்கிறானோ அன்றே வாழ்வின் இலட்சியம் உயிர்பிக்கிறது..

உள்ளதில் துணிச்சல் வேண்டும் ஆனால் செய்யும் வேலையில் உயர்வு தாழ்வு எல்லாமே வேண்டும்... துணிச்சல் எங்கிருந்து பிறக்கிறது தன்னம்பிக்கை எங்கு உழைக்கிறதோ அங்கே பிறக்கிறது... உண்மை தான் உழைக்கும் கையில்

தான் தனக்கான உணர்வு பிரதிபலிக்கிறது..

நிழலை பார்த்து மயங்கிய நிலையிலுள்ள மானுடர்கள் இன்று தன்னம்பிக்கையும் நிழலாகவே பார்ப்பதன் காரணம் என்னவோ புரியவில்லை... ஏன் இன்னும் மீண்டெழ மாட்டீர்கள் உறவுகளே... உங்களின் முயற்சியில் வளர்ச்சி இருந்தால் இன்று உங்கள் வாரிசுகள் குழந்தை தொழிலாளியாக இருந்திருக்க மாட்டார்கள்...

முயன்ற அளவு தன்னம்பிக்கை கைவிடாது உறுதியோடு செயல்படுங்கள்...

சில எடுத்துக்காட்டு கவிதை....

**''குழந்தை தொழிலாளர்''**

**வறுமை கோட்டில்**
**மணவாழ்க்கை என்னும் பயணம்**
**தேவையா மானிடா**

**உனக்கான உணவை அளிக்க**
**தெரியாத உனக்கு**

**உன்னை நம்பி வருபவளுக்கும்**
**உங்களுக்கான உயிர்க்கும்**
**அளித்திட முடியுமா**

**முடியாத சூழ்நிலையில்**
**உன் வரலாறு பேச வாரிசு கேட்கிறதா**

**வாழையடி வாழையாக**
**குழந்தை தொழிலாளி என்னும்**
**பெயர் உம் வாரிசைத்**
**தொடர ஆசைப்படுகிறாயா**

**விழித்து வழி சொல்லுடா மானிடா**

நான் கண்ட பயணம் இதுடா மகனே நீ செல்லும் பாதை இது இல்லை என்று...

போட்டிகள் நிறைந்த உலகில் வாழ கற்றுக் கொடுங்கள் குழந்தைகளுக்கு...

தொழிலாளியாக வாழ வழி வகுக்காதீர்கள்...

## முடியாது என்றார் முடித்துத் தந்தார்

கவியரசோடு அறிமுகமான துவக்கம் அது..அப்போது நான் சென்னையில் 'ஆனந்த விகடன்' இதழில் பணி புரிகிற காலம்.

அது 1979... எனக்கு முதலும் கடைசியுமாக பாடல் எழுத ஒரு வாய்ப்பு வந்தது, அந்தப் பட பூஜை அழைப்பிதழோடு கவிஞரை பூஜைக்கு அழைக்க கவிதா ஓட்டலுக்குப் போகிறேன் .அங்கு எம்.எஸ்.வி.யுடன் பாடல் கம்போசிங்... அநேகம் மௌலியின் மேற்கே உதிக்கும் சூரியன்யு படம் என்று ஞாபகம்.

திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண் உற்சாகமாகப் பாடும் பாடல் காட்சி ''வானிலே எந்நாளும் மாறாத சந்ரோதயம்'' என பாடல் தொடங்கும். மௌலி புது இயக்குனர் என்பதால் கண்ணதாசனிடம் தான் விரும்புவதை சொல்ல முடியவில்லை. எம் எஸ் வி யிடம் காதோடு சொல்கிறார், ''பாடலில் ஏதாவது ஓர் இடத்தில் ஒரு வரியின் கடைசி வார்த்தை அடுத்த அடியின் முதல் வார்த்தையாக வந்தால் நல்லது'' என்று... எம் எஸ் வி கவிஞரிடம் இயக்குனர் விருப்பத்தைச் சொல்கிறார். அதற்கு மடக்கு என்று பெயர். ''இந்த இடத்தில் கொண்டு வரமுடியாது'' என்று சொல்லி விட்டு மூன்று நான்கு சரணங்களாக சொல்லிக் கொண்டுவருகிறார்... கடைசியில் இப்படி முடித்தார் பாருங்கள்

ஒளியின் மேன்மை தீபத்திலே
தீப மேன்மை தெய்வத்திலே
தெய்வ மேன்மை கோயிலிலே
கோயில் மேன்மைக் குடும்பத்திலே.

எதை முடியாது என்றாரோ அதை மனதில் வாங்கி வைத்துக் கொண்டு முடித்துக் கொடுத்தார் பாருங்கள். அதுதான் வரகவி... சுற்றி இருந்த நாங்கள் கை தட்டி ஆரவாரித்தோம் என்று சொல்லவும் வேண்டுமோ ?

- ஜெயதேவன்

பொன். குமார் ஹைக்கூ, கவிதை, கட்டுரை, விமரிசனம் என பல தளங்களில் இயங்கி வருபவர். ஹைக்கூ, கவிதை, கட்டுரை, விமரிசனங்கள் என பத்தொன்பது தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். ஹைக்கூ அனுபவங்கள் என்னும் இவரின் முதல் தொகுப்பே ஹைக்கூ உலகின் முதல் விமரிசனத் தொகுப்பாகும். தமிழக அரசு தேர்ந்து எடுத்து நிதி உதவி அளித்து வெளியானது இவரின் 'தலித்தியத்தை முன் வைத்து' என்னும் தொகுப்பு. திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம், கவிஞர் சிற்பி அறக்கட்டளை விருது, சேலம் தாரைப் புள்ளிக்காரர் அறக்கட்டளை உள்ளூர் இலக்கிய விருது உள்பட 15 விருதுகளைப் பெற்றுள்ளார். சேலம் கவிஞர் எழுஞாயிறு இலக்கிய இளைஞர் விருதே பொன். குமார் பெற்ற முதல் விருது. கவிஞர் எழுஞாயிறு தந்த முதல் விருதும் இதுவேயாகும். சேலம் எழுத்துச் சிற்பிகள் கவிதைப் போட்டியில் பரிசு உள்பட 17 பரிசுகள் பெற்றுள்ளார். இராஜ பாளையம் மணிமேகலை மன்றம் நடத்திய சிறுகதைப் போட்டியில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் பரிசு பெற்றுள்ளார். கவிவானர் என்னும் பட்டம் உள்பட பட்டங்களும் பெற்றுள்ளார்.

பொன். குமாரின் இயல்புத் தொகுதியை ஆய்வாளர் கு. மோமன் ராஜ் ஆய்வு செய்துள்ளார். பொன். குமாரின் புதுக் கவிதைகள் ஓர் ஆய்வு என்னும் ஆய்வேட்டை இளமுனைவர் பட்டத்திற்காக எழுதியுள்ளார் சு.யோக நாதன். கவிஞர் பொன். குமார் படைப்புகள் ஆய்வு என்னும் ஓர் ஆய்வேட்டைத் தந்துள்ளார் முனைவர். இரா. தரும ராசன்.

அறுபதுக்கும் மேற்பட்ட தொகுப்புகளுக்கு அணிந்துரை எழுதியுள்ள பொன். குமாரைச் சந்தித்தோம்...

# பொன் குமார்
# புதியவரல்லர்

■ படைப்புகள் வாசித்து எதிர்வினை யாற்றுவதும் ஒரு நல்ல விமர்சகருக்கு அடையாளம் என்று நீங்கள் சொல்வதிலிருந்து... ஒரு படைப்புக்கான தகுதியாக எதனை முன்வைக்கின்றீர்.

□ படைப்புக்கான தகுதி என்று ஒரு குறிப்பிட்ட வரைமுறை கிடையாது. ஒரு படைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் இலக்கணமும் கூற முடியாது. வாசிக்கும் போது மனத்தை எது உலுக்குகிறதோ மனத்தை எது பாதிக்கிறதோ அதை படைப்புக்கான தகுதி என்று வேண்டுமானால் குறிப்பிடலாம். ஒவ்வொரு படைப்பும் ஒவ்வொரு விதத்தில் சிறப்பாக இருக்கும். பேசும் படி இருக்கும். எல்லா படைப்புகளையும் ஒரே அளவு கோளை வைத்து பார்க்க முடியாது. பார்க்கவும் கூடாது. ஒவ்வொரு படைப்புக்கும் ஒரு தகுதி இருக்கும். புதுமைப் பித்தன், ஜெயகாந்தன், பிரபஞ்சன், பா. செயப்பிரகாசம், பிரபஞ்சன், எஸ். ராமகிருஷ்ணன், சா. கந்தசாமி, ஜெயமோகன் என்னும் கதாசிரியர்கள் இருந்தாலும் பாரதி, பாரதிதாசன், சிற்பி, வைரமுத்து, மு. மேத்தா, தமிழச்சி, புவியரசு போன்ற புதுக்கவிஞர்கள் இருந்தாலும் ஈரோடு தமிழன்பன், அமுத பாரதி, அறிவுமதி ஆகிய ஹைக்கூ படைப்பவர்கள் இருந்தாலும் அனைவருக்கும் ஒரே தகுதி கிடையாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தகுதி உண்டு. அதேபோல்தான் ஒவ்வொரு படைப்புக்கும் ஒவ்வொரு தகுதி உண்டு.



தகுதியான படைப்புகள் காலத்தை வென்று நிற்கும். ஒரு படைப்புக்கான தகுதி என்று எதையும் கூற முடியாது. தகுதி இல்லை என்று எதையும் தள்ளுபடி செய்வதும் கூடாது.

■ ஏறக்குறைய தமிழ் இதழ்களில் எந்த இதழ் களைப் பார்த்தாலும் 'பொன்.குமார், சேலம்' என இருப்பதை இலக்கிய ஆர்வலர்கள் அறிவர். உண்மையில் எப்போதும் எழுத்துக்களுடனே நீங்கள் வசிப்பதாகத் தோன்றுகிறது..

□ 1990களில் பெரும்பாலான அனைத்து வார, மாத இதழ்களில் எழுதி வந்தேன். தொடர்ந்து இலக்கிய இதழ்களின் தொடர்பு ஏற்பட்டது. சிற்றிதழ்களிலும் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. மாதம், காலாண்டு, எண் வழி என ஏராளமான சிற்றிதழ்கள் வந்து கொண்டிருந்தன. பரவலாக அறியப்பட்ட கணையாழி முதல் மிகக் குறுகிய சுற்றில் வந்து கொண்டிருந்த உளி வரை எனக்குக் கிடைத்த அனைத்து இதழ்களிலும் எழுதினேன். காலச்சுவடு இதழில் வாசகர் கடிதமும் வெளியானது. சிற்றிதழ் வட்டத்தில் பொன். குமார் என்னும் பெயர் பரிச்சயமானது. இதை அறிந்த கீரைத் தமிழன் என்னும் சிற்றிதழ் ஆய்வாளர் அவருடைய முனைவர் பட்ட ஆய்வேட்டுக்கு நேர்காணலுக்காக என்னைத் தேர்ந்தெடுத்து என் நேர்காணலை அவரின் ஆய்வேட்டின் பின் பகுதியில் இணைத்துள்ளார். இதற்குக் காரணம் இதழ்களை வாசிப்பதும் எழுதுவதும்தான் காரணம். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் வாசிப்பதுண்டு. வாசிப்பது குறித்து எழுதுவது உண்டு. எழுத்து என்பது எனக்குத் தொழில் மட்டுமல்ல இலக்கியமுமாகும்.

■ இருபதுக்கும் மேற்பட்ட கவிதை, கட்டுரை நூல்கள் எழுதியுள்ளீர். பிற நூல்களை விமர்சிக்கும் உங்கள் நூல் விமர்சிக்கப்பட்டுள்ளதா... அதுபற்றி...

□ இருபதுக்கும் மேற்பட்ட தொகுப்புகள் அல்ல. பத்தொன்பது தொகுப்புகள்தான் வெளியாகியுள்ளது. தொடக்கக் கால தொகுப்புகள் விமரிசிக்கப்படவில்லை. ஒரு சிலர் கடிதம் எழுதியுள்ளனர். 'தீக்குளிப்புகள்' தொகுப்பு குறித்து கவிஞர் வைரமுத்து 'தொகுப்பு தீப்பெட்டி மாதிரி சிறியதாக இருந்தாலும் உள்ளே தீபங்கள் ஏற்றவும் தீப்பந்தங்கள் கொளுத்தவும் நெருப்பு இருப்பு கொண்டிருக்கிறது' என்று எழுதியுள்ளார். 'நிஜமும் நிழலும்' ஹைக்கூ தொகுப்பு குறித்து எழுத்தாளர் பொன்னீலன் ஒரு கடிதம் எழுதியுள்ளார். நகரங்களிலும் கிராமங்களிலும் அனாதையாய்ச் சாகும் உண்மையை மிக இயல்பாகவும் அழகாகவும் கவிதையாக்கப் பட்டுள்ளதாக என் இயல்பு தொகுதி குறித்து எழுத்தாளர் தி. க. சி. யால் எழுதப்பட்டுள்ளது. கணையாழி இதழிலும் ஒரு விமரிசனம் வந்தது.

'இருப்பு' என்னும் கவிதை நூலை முன்வைத்து கவிஞர் மு. முருகேஷ்

'பொன். குமாரின் இருப்பை மட்டுமல்ல தமிழ்க் கவிதையின் இருப்பையும் உணர்த்தும் கவிதை நூலென்றே உறுதியாகச் சொல்லலாம்' என்று குறிப்பிட்டுள்ளார். என் 'பிற' என்னும் ஹைக்கூத் தொகுப்பு குறித்து முனைவர் தி. கமலி அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட விமரிசனம் முங்காரி இதழில் வெளியானது. 'முடிவிலும் தொடங்குகின்றன பல' என்னும் தொகுப்பின் கவிதைகள் 'களைப்பு தராத கவிதைகள்' என்று விமரிசனத்தில் தெரிவித்துள்ளார் எழுத்தாளர் வளவ. துரையன். தொடர்ந்து பலர் எழுதி இருந்தாலும் கவிஞர் விழி. பா. இதய வேந்தன், கவிஞர் அன்பாதவன் போன்றோர்களும் விமர்சித்து உள்ளனர். ஒரு சிலர் வாய் மொழியாக விமரிசித்துள்ளனர். கவிஞர் பட்டி சு. செங்குட்டுவன் விருத்தாசலத்தில் என் தொகுப்பிற்கு ஒரு விமரிசன கூட்டத்தை ஏற்பாடு செய்தார். படைப்புகள் அளவிற்கு விமரிசனங்கள் வந்துள்ளன. வரவேற்பதாக இருந்தாலும் எதிர்ப்பதாக இருந்தாலும் விமரிசனங்களை ஏற்றுக்

**வடிக்கும் கண்ணீரெல்லாம்**
**உன்னால்தானெனினும்**
**வடிகின்ற கண்ணீரோடு**
**கரைந்துவிடவில்லை உன் நினைவு,**
**இதயத்தில்தான் உறைந்திருக்கிறாய்**
**துடிக்கும் உணர்வாய் ஊற்றாய்!**

**Dr.ஜீவா**

கொண்டே என் படைப்புப் பணி தொடர்கிறது.

■ உங்களைக் கவர்ந்த விமர்சகர் இருப்பின் அவரைப் பற்றிய நினைவுகளை பகிருங்களேன்?

□ தமிழ் இலக்கியப் பரப்பில் விமரிசகர் பலர் இருந்தாலும் விமரிசகர் என்று விமரிசையாக அறியப்பட்டவர் விமரிசகர் வெங்கட் சுவாமி நாதன். எழுத்தாளர்கள் வல்லிக்கண்ணன், தி.க.சி. ஆகியோர் இருந்தாலும் பாராபட்சமற்ற, சமரசமில்லாத ஒரு விமரிசகர் வெங்கட் சாமி நாதன். கலைஞர் கருணாநிதியை விமரிசிப்பவர் கனிமொழியை வரவேற்கிறார். கவிக்கோ அப்துல் ரகுமானையும் ஏற்கவில்லை. அவரின் விமரிசனம் ஒரு சார்பாக இருந்தாலும் அவர் ஒரு விமரிசகர் என்பதை மறுக்க முடியாது. அவரின் ‘ என் பார்வையில் கவிதைகள்’ என்னும் விமரிசனத் தொகுப்பின் தலைப்பே என் ‘ ஒரு படைப்பாளியின் பார்வையில்’ என்னும் முதல் விமரிசனத் தொகுப்பு வெளி வர காரணமாக இருந்தது. மேலும் அன்றைய வறட்சியிலிருந்து இன்றைய முயற்சி வரை, பாவைக் கூத்து, என் பார்வையில் சில கதைகள் நாவல்கள், சில இலக்கிய ஆளுமைகள், பான்ஸாய் மனிதன், இச் சூழலில், கலை வெளிப் பயணங்கள், திரை உலகில் என்னும் விமரிசனத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். வெங்கட் சாமிநாதன் தவிர மற்றவர்கள் படைப்பாளிகளாகவும் இருந்து விமரிசகராகவும் செயல் பட்டு வருகின்றனர். ‘‘ எந்த மேல் நாட்டு விமரிசன பாணியையும் கைக்கொள்ளாமல் தன் சுவைக்கு உட்பட்டதை, படைப்பின் கலாச்சாரப் பின்னணியோடு பார்க்கும் தனி ரகம் இவரது விமரிசனம் ” என்பார் கோமல் சுவாமிநாதன். வெங்கட்சாமிநாதன் விமரிசனம் மீதும் விமரிசனம் உண்டு.

■ புற்றீசல்கள் போல் கவிதைகள் வெளி வருகின்றன இன்றைய காலகட்டத்தில், பரவலான பேச்சு உள்ளது. இலக்கிய ஆளுமைகளும் இதனை முன்வைக்கின்றனர். நீங்கள் பல தளங்களில் இயங்குவதால் இதை எப்படி காணுகிறீர்..?

□ எல்லா கால கட்டத்திலும் கவிதைகள் புற்றீசல்கள் போல வந்து கொண்டுதான் உள்ளன. தவிர்க்கவும் முடியாது. பாரதிக்கு முன் செய்யுளாக இருந்தது. பாரதி கவிதையின் போக்கை மாற்றினார். பாரதிக்கு பின் வந்தவர்கள் இலக்கணம் தெரிந்தவர்கள் மட்டும் மரபில் எழுதினர். சி. சு. செல்லப்பாவின் எழுத்துக்குப் பின் புதுக்கவிதை வரலாயிற்று. வானம்பாடிக்குப்பின் கவிதை பரவலாயிற்று. கவிதை எழுதுவது சிரமம். கவிதைப் போல் எழுதுவது சுலபம். கவிதைப்போல்தான் ஏராளமானோர் எழுதிக் கொண்டுள்ளனர். கவிதைகள் புற்றீசல்கள் வருவது கண்டு கவிஞர் மு. மேத்தா கவிதை எழுத வேண்டாம் என ‘சற்றே இரும்பிள்ளாய்’ என்னும் தலைப்பில் ஒரு கவிதை எழுதினார். அதற்கு ஏராளமான எதிர்ப்புகள் கவிதையாகவே கிளம்பின. அப்போது நானும் எழுதினேன்.

மூத்த கவிஞர்கள்
முடிவு செய்திருந்தால்
மேத்தா கவிஞர்
மலர்ந்திருக்க முடியுமா

என்று எழுதியதாக நினைவு. கடைசிக் கவிஞனைக் காலம்தான் முடிவு செய்ய வேண்டும். கால வெள்ளத்தில் சருகுகள் அடித்துச் செல்லப்படும். எஞ் சியவை காலத்தை வென்று நிற்கும். பாரதியாரால் அறிமுகப் படுத்தப் பட்டாலும் ஹைக்கூவை அதிகம் வரவேற்றவர் எழுத்தாளர் சுஜாதா. அவருக்கு வரும் ஹைக்கூத் தொகுப்புகளில் இருந்து ஏதாவது ஒரு ஹைக்கூவை எடுத்துக் காட்டுவது அவர் வழக்கம். அவரே ஒரு நிலையில் நிறைய ஹைக்கூ தொகுப்புகள் வருவதைக் கண்டு தொகுப்புகளை அனுப்ப வேண்டாம் என்றார். ஆனாலும் அவருக்கு அனுப்பப்பட்டன. அவரும் நல்ல ஹைக்கூக்களை எடுத்துக் காட்டாமல் இல்லை. புற்றீசல்கள் போல் கவிதைகள் வந்தாலும் வலியவையே வெல்லும்.

வென்று நிற்கும்.

■ பல்வேறுபட்ட இதழ்களை இடைவிடாமல் வாசிக்கின்ற பழக்கம் உங்களுக்குண்டு. அவற்றில் இலக்கியத் தரத்தை மனதளவில் நிர்ணயம் செய்ததுண்டா?

□ இலக்கியத் தரம் என்பது எல்லா இதழ்களிலும் காணமுடியாது. இலக்கியத்துடன் சில இதழ்கள் இயக்கம் சார்ந்தும் செயல் படுகின்றன. அவ்வாறான இதழ்களில் இயக்கக் கொள்கைகள் முன்னிற்கும். வணிக ரீதியிலான இலக்கிய இதழ்களும் உண்டு. இலக்கியத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு இயங்கும் இதழ்களும் உண்டு. காலச் சுவடுக்கு ஓர் இலக்கியத் தரமுண்டு. கணையாழிக்கு ஓர் இலக்கியத் தரமுண்டு. புதிய புத்தகம் பேசுது, தாமரை, செம்மலர் போன்ற இதழ்களிலும் இலக்கியத் தரமுண்டு. இனிய உதயம், தீராநதி, உயிர்மை, தடம், பேசும் புதிய சக்தி, தளம் போன்ற இதழ்களிலும் இலக்கியத்தரமுண்டு. சங்கு, பயணம், சிகரம், தாழம்பூ என பல சிற்றிதழ்கள் இலக்கியத்திற்காகவே நடத்தப் படுகின்றன. படைப்புகளின் தரத்தைப் பொறுத்தே இதழ்களின் இலக்கியத் தரம் நிர்ணயம் செய்யப் படுகின்றன.

■ உங்களுடைய இந்த இலக்கிய பயணம் எப்போது எங்கிருந்து தொடங்கியது என நினைவு கூர முடியுமா?

□ கல்லூரி காலங்களில் ஒன்றிரண்டு கவிதை எழுதியதுண்டு. கண்ணதாசன், ஜெயகாந்தன், சுஜாதா போன்றோர்களின் படைப்புகளை வாசித்ததுண்டு. 1990களின் தொடக்கம். வார இதழ்கள் வாசிக்கும் பழக்கம் இருந்ததால் கே. ஜி. எப். பழனி சாமி பெங்களூர், லட்சுமி செங்குட்டுவன் வேலூர், ரேவதிப் பிரியன் ஈரோடு என்னும் பெயர்களை அடிக்கடி பார்ப்பதால் நாமும் எழுதினால் என்ன என்னும் ஏற்பட்டது. அப்போது சேலம் மாவட்ட வாசகர் பேரவைக் கூட்டம் நடத்துவது அறிந்து கலந்து கொண்டேன். அதன் பிறகு முதலில் கடிதமே எழுதினேன். முதல் கடிதமே ஆனந்த விகடனில் வெளியானது. அதே போல் என் முதல் கவிதையும் ஆனந்த விகடனிலேயே வெளியானது. தொடக்கக் காலத்தில் வணிக இதழ்களிலேயே எழுத்துகள் வெளியானது. மெல்ல மெல்ல சிற்றிதழ் பக்கம் எழுதுவது தொடர்ந்தது. சிற்றிதழ்கள் மூலமே இலக்கியப் பயணம் தொடர்ந்தது . இன்றும் தொடர்கிறது. தற்போது கொஞ்சம் குறைந்துள்ளது.

■ உங்களுடன் பயணித்த சக இலக்கிய வாதிகள் குறித்து..?

□ தமிழக அளவில் பலர் இருந்தாலும் சேலத்தின் சக படைப்பாளிகள் குறித்து பேசியே ஆக வேண்டும். வாசகர் பேரவையில் பலர் இருந்தனர். கவிதை எழுதுவதில் ஆர்வம் இருந்ததால் பூங்காக் கவியரங்கம் நடத்தப் பட்டு வந்தது. வாசகப் பேரவையுடன் நின்று போன நண்பர்களும் உண்டு. எங்களுடன் இணைந்து கொண்டவர்களும் உண்டு. எழுத்துச் சிற்பிகள் என்று ஓர் இயக்கம் தொடங்கி மாதம் ஒரு கூட்டம் நடத்தி உளி என்னும் ஒரு சிற்றிதழை நடத்தி வந்தோம். எங்களுடன் பலர் இருந்தாலும் கவிஞர் அ. கார்த்திகேயன், கவிஞர் சூர்யநிலா, எழுத்தாளர் சந்தியூர் கோவிந்தன் மற்றும் நான் ஆகியோர் மட்டும் இலக்கியத்தில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்தோம். அ. கார்த்திகேயன் வேட்கை இதழும் எழுத்தாளர் சந்தியூர் கோவிந்தன் தூறல் இதழும் நடத்தி வருகின்றனர். கவிஞர் சூர்யநிலா எழுத்துக் களம் என்னும் அமைப்பை வைத்து நடத்தி வருகிறார். பழ. புகழேந்தி, ப. தமிழ்ச் செல்வா ஆகியோர் அவ்வவ்போது இயங்கி வருகின்றனர். எங்களுக்குப் பின்னாலும் சேலத்தில் சிலர் வந்துள்ளனர். அவர்கள் இணைந்து செயல்படவில்லை.

■ தமிழ்நெஞ்சம் வாசகர்களுக்குத் தாங்கள் கூற விரும்புவது?

□ தமிழ்நெஞ்சம் வாசகர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து வாசகர்களுக்கும் கூற விரும்புவது நிறைய வாசியுங்கள், நிறைய எழுதுங்கள்… நிறைவாக வழக்கமான என் வாசகம்…

எழுதுங்கள்
எழுதுகிறேன்
எழுதுவோம்
என்றும் அன்புடன்

**பொன். குமார்**

## துளிப்பாக்கள்

**மகிழ்நன் மறைக்காடு**

★

நனைந்த கூரை
கசிந்து கொண்டிருக்கிறது
புகை!

★

விளக்கு ஒளியில்
விடிய விடிய நடனம்
விட்டில் பூச்சிகள்!

★

கோடைமழைக்குப் பின்
தரிசு நிலத்தில் வளரத் துவங்குகிறது
கரையான் புற்று!

★

இடதும் வலதும்
இணைந்தே செயல்படுகின்றன
உழைப்பாளி கரங்கள்!

★

வெடித்த பின்
பறக்கத் துவங்குகிறது
உத்தாமணி விதை!

★

மேகம் விலக
குளத்தில் பூக்கின்றன
விண்மீன்கள்!

★

வீடுகட்டும் கனவில்
மண்ணை அள்ளிப் போட்டது
மணல் விலை!

★

தடை இல்லை
மணல் கடத்த
வளை பறிக்கும் எறும்பு!

★

தனக்குத் தானே
வளையம் வைத்துக் கொள்கிறதோ
நீரில் விழும் மலர்!

★

ஆற்றங்கரை காற்று
தொடர் தழுவலில் தலைகுனிந்தபடி
நாணல்!



## "வனிதை எனும் வனிதை"

ஓவியர்.ஆர்.ராஜராஜன்.

---

நெடிய வீதியில்
நிசப்தமாய் கடக்கும்
நெடுந்தேர் .
கடந்து சென்றபின்னும்
காலம் நகராத கடப்பாடு.
திக்பிரமையில் இருந்து
தெளிந்தபோதும்
இரும்பாய் தைத்த.
இளகிய பாசுரம்.
இன்றும் தழும்பாய்
இன்பியல் சாகரம்.
யாருக்கும் வாய்க்காத
அழகியல் ஆளுமை.
நீ உணர்த்திய நியாயங்கள்
இன்றும் இனிக்கிறது